உ

கடவுள் துணை.

ஆரைமாநகர்

சாமிநாதப்பிள்ளையென்னும்

தெய்வச்சிலையாபிள்ளை அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

மநு நீதிகாதல்.

இஃது

குயப்பேட்டை

வீ. இராஜு முதலியாரால்

பார்வையிடப்பட்டு,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

பி. நா. சி. கடைகாரியம்,

மு. கிருஷ்ணப்பிள்ளையவர்கள்

விருப்பத்தின்படி,

பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] [அணா 4.

1918.

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106
TAMILNADU - INDIA



ரிங்வோரங் கியூர் என்னும்

படை சங்காரன்.

ஐயா, உம்முடைய தேகந்தில எந்த பாகத்திலாவது மேகப்படைகள் அல்லது பெண்களுடைய தேகத்தில் எவ்வித படைகள் இருந்தாலும் எமது (படை சங்காரன்) என்னும் ஔஷதத்தில் போதுமானது எடுத்து படையுள்ளயிடத்தில் தடவி நன்றாய்த்தேய்த்து மூன்றுமணிநேரம் பொருத்து சோப்பு அல்லது சீக்காய்போட்டுதேய்த்து அலம்பிவிடவும். இதுபோல இரண்டு மூன்றுவேளை மேற்சொன்னபடி செய்தால் நல்ல குணத்தைக் காணலாம். இந்த மருந்தினால் அனேக ஜெனங்கள் சுகமடைந்திருகிறார்கள்.

ஒரு புட்டியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா தபால்ஸ்டாம்ப் அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

மதராஸ்.

உ

கடவுள் துணை.

மநுநீதிகாதல்.

விநாயகர் துதி.

யானைமுகவானையுமை யாளனார்பாலகனே
ஞானமுதலானகுரு நாதனே-மானிலத்தில்
ஆதிமனு நூலிலுறை யாததனையானுமொரு
காதலெனாவோதவருள் காண்.

புத்திவருமெய்ஞ்ஞானப் போதமுறும்புண்ணியமுஞ்
சத்தியமாமேன்மைமிகத் தங்குமே-நித்தநித்தம்
சாதிணையதாய்ப்புவியில் சாமிநாதன்சொல்மனு
நீதிநூல்பார்த்தால் நிதம்.

வாணி துதி.

பூமேவுலோகம் புகழுமனுநீதிநூல்
பாமேவுசெஞ்சொற் பயனறிந்துயான்பாட
மூலகணேசன் முளறிபதம்போற்றி
வாலைசரஸ்வதியென் வாக்கிலிருந்தருள்வீர்

அவையடக்கம்.

வேதமுறைசொன்னதிந்த மேதினியிலுள்ளமநு
நீதிமுறைதன்னை நிகழ்த்தினார்முன்னோர்கள்
வள்ளுவனாரௌவைமுதல் வழுத்துமநுநீதி
தெள்ளுதமிழ்க்கடலிற் சிற்றகப்பைமுகந்தாற்போல்
மாலைசதக மநுநீதிசாரமென்றும்
ஞாலமதிற்கவிஞர் நவின்றார்பலநூலால்
பண்ணும்பலநூலிற் பாடும்பொருளதனை
எண்ணியெந்தன்சிந்தைக் கிசைந்ததேயறிந்தமட்டும்
ஞாலமதிலுதிரும் நவமணியெல்லாம்பொருக்கி
மாலையாய்க்கோர்த்த வகையாகவிந்நூலைக்
காதலுடனியானுமொரு காதலெனப்பாடிவைத்தேன்
மாதவத்தோர்முத்தமிழின் வல்லோர்மனமகிழ

ஆக்கியோன்பெயர்.

மாவளஞ்சேர்செம்பி வளவாடன்மிக்கான
பூவைசியனென்னும் புகழ்படைத்தகங்கைகுலன்

ஆதிவையைசங்குமுக மாறைந்தான்ராம
நாதவேள்பாலன் நவினகவிராஞ்சிதவான்
சிலமிகுமமூர்தச் செந்தமிழின்பாவினஞ்சொல்
மாலோனருள்சிறந்த ம॰பாரதப்ரசங்கன்
கையுற்றநெல்லிக் கனிபோலறியவென்று
தெய்வச்சிலையாலுரைத்த தெள்ளமிர்தமாமிதுவே
உற்றதொருகாவேரி யொன்றாய்ப்பெருகிவரச்
சிற்றாறல்நீருமதிற் சேர்ந்தங்கேயோடுதல்போல்
சந்திரனோடம்பரத்திற் றாரகைகள்வாழ்வதுபோல்
செந்தமிழோர்முன்னே சிறியேனுரைத்ததமிழ்
புன்சொற்குதலையுங்கள் பிள்ளைமொழிபோல்மகிழ்ந்து
என்சொல்லிதனை நீங்க ளின்பமெனக்கொண்டருள்வீர்.

நூற்பயன்.

சத்தியாசத்தியமுஞ் சாதிமுறைமார்க்கங்கள்
உற்றதொருதர்மங்க ளுதவியுதவாமை
தன்மனைவிமைந்தரொடு தகமையுடன்வாழ்வதுவும்
பின்மனைவிவேசையர்கள் பேதத்துள்ளாவதுவும்
மானமீனம்வாழ்வு மகிழ்ச்சியுடன்வஞ்சகங்கள்
தானுமுயர்கீர்த்திப்ர தாபம்பரிமளித்தல்
துற்பிறவிசற்சனர்கள் சோரமுடனுக்கினைகள்
நற்பிறவியாயுள்விர்த்தி நற்பதங்கள்நல்லறிவு
கற்பனைகளொப்பனைகள் கயவர்குணவிலக்கம்
எப்போதுந்தாளாண்மை யென்றுகடவாமை
காலத்தின்கற்பனைகள் கடவுளால்நிர்ணயங்கள்
ஞாலமதில்நன்றியுட னற்றவர்பத்திமுத்தி
ஸ்ரீதேவிமூதேவி சேரிடங்கள்தானுமது
நீதிமுறைவறுமை நிச்சயமாய்சேரிடங்கள்
சேராவிடம்லோபி சின்னத்தின்பாங்குகளும்
பேறுணமாதர் பிதாவவர்களாவதுவும்
இருந்துமிறந்தோர்க ளிறந்துமிறவாதார்
மருந்துதவும்பண்டிதத்தின் மார்க்கமனத்தூக்கஞ்
சத்தமசத்தங்கள் தோகையரிலட்சணங்கள்
மெத்தப்பெரிதரிது மெலியதானங்கொடிது
மிஞ்சங்கொடுமையினால் மின்னார்களாசையினால்
வஞ்சகத்தினாலிறந்தோர் மாறுதபேறுபெற்றோர்

இத்தகமையாவதுட னின்னமின்னம்பலதாய்
சித்தமுடன்முந்நூலோர் சொன்னபடியேயுரைத்தேன்
நன்னயஞ்சேரிந்நூலை ஞாலமெல்லாந்தானறியச்
சொன்னதொருபாடற் றொகையுமோராயிரமாம்
பாடினேனிந்நூலை பயனறிந்தவுத்தமர்க்கு
ஈடுண்டோநல்லறிவுக் கின்னதொருநூலுளதோ

வேதியரொழுக்கம்.

ஆரணங்களோதுவதும் யாகாதிசெய்வதுவும்
மீறுகாயத்திரியால் வினையெல்லாந்தீர்ப்பதுவுங்
கல்லும்பிருதிமின் கானமாந்தாம்பூலம்
எல்லாச்சுலையுகரு ளெய்தும்படிமுடித்தால்
நன்னயமாய்மாரிபெய்து நாடுசெழிப்பதுவும்
மன்னர்செங்கோலு மறையோர்மகிமையன்றோ

அரச ரொழுக்கம்.

தேசத்தியற்கை தெரிந்தமநுநீதி
வாசற்பிரதானி வாய்மைகுறிப்பறிதல்
தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காத்தல்சத்தியமாம்
மன்னுங்குடிகளிலே மாறுவபிமானம்
வங்கிஷத்திலுள்ளோர் மகிமைகுறையாமல்
தங்கள்குலத்தைத் தராதரமாய்க்காப்பதுவும்
காலமிடமறிதல்மிக கானதர்மசிந்தனைகள்
தாலமிசைகீர்த்திப்ர தாபம்பரிமளித்தல்
தேவபத்தியுடன் சிட்டர்பரிபாலனமும்
மேலவராந்துட்டர்களை விரைந்தடக்குமாக்கினையும்
மாசனங்கள்மீதிலபி மானமதுபன்னுங்கும்
ராஜநீதத்தி னலமென்றுரைத்திடுமாம்

வர்த்தகரொழுக்கம்.

தானறிந்தவாணிபமுந் தப்பாகிறைவசன
மானவரோதயத்துக் கதிகஞ்சிலவழியார்
கணக்கிலணுவும்விடார் காரியத்திலேசெலவும்
இணக்கமுடன்செய்வா ரிசைவார்க்கிசைவார்கள்
பொய்யுரையும்பேசார் போற்றிப்பொருள்சேர்ப்பார்
வையகத்தில்மிக்கான வணிகர்குலமாக்கமிதாம்

மறையோர்க்குமங்களமு மன்னவர்க்குவல்லபமுங்
குறையாதவர்த்தகர்கள் கொள்வினையும்விற்பனையும்

வேளாளரொழுக்கம்.

ஆகமவேதங்கள்தே வாலயம்விளங்குவதும்
மேகம்வருஷிப்பதும் வேந்தர்கள்செங்கோன்முறையும்
பாரிலேதர்மபுரி பாலனங்கள்மேலுமுயர்
சூரவலுவுத் தொழிலாளர்சீவனமுந்
தாளாதகீர்த்தியுடன் றரணியில்வாழ்வெல்லாம்
வேளாளர்தங்களது மேழிபெருமையன்றோ

தருமநீதி.

அறத்திற்பெரிதுமில்லை யதனையணுவளவும்
மறப்பதுவேகேடன்றி மற்றுமுயர்கேடுளதோ
தர்மாதர்மம்ரெண்டுஞ் சதகோடிநாட்செயினும்
அம்மாத்திரமு மனுபவித்துத்தீருமன்றோ
எண்ணும்பலபொருளு மிகத்திற்கும்வாராது
புண்ணியபாவங்கள்ரண்டும் போவதில்லையுன்னைவிட்டு
பொன்னுடையாபரணம் பூதானமீந்தாலும்
அன்னதானத்துக் கதிகமுறுதானமுண்டோ
தன்னற்சுயமாயோர் தர்மந்துடங்குவதில்
முன்னோர்செய்தர்மத்தை முக்கியஞ்செய்தலுத்தமமாம். ௨௰

பாவபுண்ணியமிரண்டும் பல்லக்கின்கீழ்மேலும்
போவதுவேசெய்த புண்ணியமும்பாவமுமாங்
கோனுதணுவளவுங் குறையாதுவாழ்வதற்கு
ஆணிவேரென்பதுவு மறமென்றுசொல்லுவதாம்
உண்ணறியவாழ்வு மெய்தும்பெருந்தவமாம்
புண்ணியமொன்றில்லாதேல் புனல்நிறைந்தகாடாகும்
எதாகிலுந்தர்ம மெவருந்தான்செய்யவென்றால்
ஏதாகிலுமனதுக் கிசைந்தபடியேகொடுத்து
வாக்குசரீர மதனுற்சகாயங்கள்
ஏர்க்கவேசெய்வோர்க் கிகபரம்வந்திடுமே
எத்தர்மமானதற்கு மிடையூறுசெய்தவர்கள்
புத்திரருமத்திபமாய்ப் போவார்நரகமதில்
மன்னருளநீத மதனிற்பதின்மூன்றும்
முன்னமேசொன்ன முண்டுபதின்மூன்றுரைப்பார்

சேனைகுடியுஞ் சினேகமுமந்திரியும்
ஆனபலவேளாண்மை யதனுடனேயிவ்வாறும்
மிச்சமறிவீகை மேலுந்தபிரியமும்
உச்சாகமென்ப துடனேயிவைநான்குந்
தூங்காண்மைகல்வி யுடனேயிம்மூன்றும்
நீங்காமல்வேணும் நிலமாளரசருக்கு
யானைகுதிரைபடை யானுடனேயாலயங்கள்
ஆனநல்லதர்மமதி னினைவுடனேயிம்மூன்றும்
ஏழைக்கிரங்கி யெப்பிழைகளும்பொறுத்தல்
மீளவேதீர விசாரித்துத்தெண்டனையுந்
தக்கமரியாதை தயவுங்குடியினிலே
இக்குணங்களெல்லா மிருக்குமந்தராசாவை
ராசசிங்கமென்பரிவர் நாட்டினிற்பசிபிணியும்
மாசிலையாம்வருமை வாராதென்றேயுரைத்தார்
தான்செய்யுந்தர்மந் தனக்காகமுன்னோர்க
ளானபேர்தர்மத்தை யபகரித்துக்கொண்டாக்கால்
துன்னடக்கையென்றுமகா தோஷம்வந்துசூழுமென்று
நின்மலமாமென்று நிகழ்த்தினார்முந்நூலே
ஆலரசுவேம்பிதுமூன் றினதிலேயொவ்வொன்று
மேலும்விளாநெல்லி வில்வமதில்மும்மூன்றும்
அன்பாகதெங்கு மாயைந்துமாபுளியில்
ஒன்பதுடனொன்றுமீ தொன்பதையும்வைத்தவர்க்குத்
தரணியிலேயெந்நாளும் தக்கபுகழ்விளங்கும்
நரகமிவர்க்கில்லையென்று நவின்றார்மநுநூலில்
அன்னைதன்னைசுற்றங்க ளாதியிலேநம்பினவர்
முன்னுதவிசெய்தவர்கள் மிடிமையுற்றுவந்தவர்கள்
தக்கபெரியோரைச் சரணமென்றடைந்தார்கள்
மிக்கவெளியோர்கள் மேனாளிற்சேவகரை
கைநழுவற்செய்யாமற் காப்பாற்றுமுத்தமர்க்கு
வையகத்தில்வாழ்வெய்தும் வம்மிசமும்விர்த்தியுண்டாம்
தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காத்தவுத்தமர்க்கு
என்னென்னபாவம்போ மிகபரம்வந்தெய்திடுமே
மாமறையோர்முதலாய் மற்றுமுள்ளோர்தங்களுக்கும்
சேமமுடனெண்ணெய் தேய்ப்பவர்கள்தங்களுக்கும்

மறையோர்க்குத்தொண்டுசெய்து மாதாவைத்தெய்வமென்பேர்
சறவைமனைக்கண்டவுடன் கையாற்சொரிபவற்கு
எண்ணுமற்கோடி எக்கியங்கள்செய்தபெருகு
புண்ணியர்வந்தெய்துமென்று புகன்றார்மநுநூலில்
துர்மார்க்கர்தங்குடியைச் சுத்தமாகக்கெடுத்து
நன்மார்க்கமுள்ளசில நற்குடியைக்காத்திடலாம்
அறக்குடிபத்தானாலு மவர்கடனைக்கெடுத்து
சிறப்புற்றபட்டணத்தைச் சீர்திருத்திகாத்திடலாம்
வீடானபட்டணத்தை மிகவுமங்கேகெடுத்து
நாடானதைக்க லாகுமதிற்பாவமில்லை
என்றுமுன்னாள்மாயவனு மேயரவானைப்பலியாய்க்
கொண்டிடப்பாண்டவற்குக் கூடியதிவ்வாருகும்
தீபமொன்றுலட்சந் திரிகொளுத்தினுலுமந்தத்
தீபங்குறையாத செய்கைபோலெந்நாளும்
தனமீதிலோயாத் தானதருமஞ்செய்வதற்கு
மலர்மாதாவுண்டாகும் வாழ்வதுவுங்குன்றாது
நன்மையேதர்மமதி னாலேவரும்தாழ்வு
துன்பம்வருவதில்லை தூயமனைகுன்றாது
தன்மைதர்மத்தாற் றுலங்கும்பெருவாழ்வு
நன்மைதரமாட்டாது நல்விர்த்தியாகாது
தர்மம்பொருள்கிடைத்த தற்காலஞ்செய்யவென்று
வருமைவந்தால்தர்ம மதுசெய்யக்கூடாதே
காய்பழங்கள்பூவிலைகள் பதித்தமரங்களிலே
வாழ்வுசென்றால்நற்கனிகள் மட்டுமுதிராமல்
தக்கபழங்காய்பூ தளிர்முதலாயுதிரும்
பக்குவம்போர்கெற்பமுதற்பயந்தமனுக்களிலே
சாலக்கிழவர்மட்டுஞ் சாவதன்றிமற்றெவரும்
ஞாலமிசைச்சாவதில்லை யாக்குமென்றெண்ணவொண்ணு
என்னவயதானாலு மியல்புவரும்வேளை
நன்னயஞ்சேர்தர்மஞ்செய் தாலிதுவேயுத்தமாம்
பண்டுசெய்தபுண்ணியமும் பாவமென்றுஞ்சொல்லும்விதம்
ரண்டுமெனுபவிப்பா ரெக்காலமானாலும்
நமக்குள்ளதைச்சமைத்து நாமுண்டுவெந்தபிறர்
தமக்குங்கொடுக்கின்ற தர்மமேமுக்கியமாம்

வாசற்கதவடைத்து வைத்துண்பார்க்குச்சொர்க்க
வாசற்கதவு மாறுதடைத்திருக்கும்
உப்பில்லாக்கூழு முளமகிழ்ந்துதான்கொடுத்தால்
ஒப்பில்லாப்பாலமிர்த மொக்குமென்றார்முன்னோர்கள்
பகைவன்கொடுங்கோபி பாலமிர்தமீந்தாலும்
மிகவானநஞ்சநஞ்சுக் கெட்டியாய்க்கொப்பிடலாம்
ஓட்டைக்குடத்திலிட்ட வுதகம்போனாற்போலே
நாட்டமெவர்வாழ்வு நாளுக்குநாள்குறையும்
கூடிவருங்காலங் குறிப்பறிந்துதம்மாலே
கூடுமட்டுந்தர்மங் கொடுத்தாரேயாமாகில்
வாணாளேபோகும் வழியடைக்குங்கல்லென்று
கோணாதவாய்மை குறளிலேசொன்னாரே
ஆறிலொருகடமை யரசர்க்காமைந்துபங்கு
சேரும்விருந்துசுற்ற தெய்வம்பிதிர்தமக்காம்
இல்லறத்தில்வாழ்ந்தா லிவ்வாறுசெய்யவென்று
வல்லமைசேர்வேதமுறை வள்ளுவருஞ்சொன்னாரே
பாவத்தாற்பொன்தேடிப் பலதர்மஞ்செய்தாலு
மேவுற்றபுண்ணியங்க ளெள்ளளவும்வாராதே
தர்மத்தாற்றேடித் தாதாரமுங்கண்டறிந்து
தன்மையுடன்வந்தோர் தமக்குவிருந்தளித்து
இன்னம்வருவிருந்துக் கெதிர்பார்த்திருக்கின்ற
தன்னபவான்வீடந்த லட்சுமியின்வீடாகும்
பூமியிலேவித்தேறும் போட்டதேயுண்டானால்
தாமேதானைஸ்வரியந் தன்னாலேகூடிவரும்
ஏற்போர்களாரேனு மெவ்வேளைவந்தாலும்
சுர்ப்பாகத்தம்மாலே கூடுமட்டுமீந்தக்கால்
இருந்தாலிறந்தாலு மெந்நாளுங்கீர்த்தியுண்டாம்
பிறந்தாலுமேலாம் புகழுதிகவாழ்வுமுண்டாம்
தர்மங்களாவதுதான் தர்மவான்செய்வதல்லால்
கர்மிகளுக்கெய்தாதெக் காலமுந்தான்செய்யானும்
எத்தர்மமானாலு மீகைக்கிணையில்லை
மற்றெல்லாம்பின்னென்று மநுநீதியிலுரைத்தார்

மாரிச்சிறப்பு.

மண்ணிலுறுதவங்கள் மாதானமற்றனைத்தும்
விண்ணினறம்பானால் விழலாகும்வாரிமுதல்

மாரிவளமு மாணிலத்திற்புற்பூடுஞ்
சீர்பெருந்தானதவந் தேவாலயச்சிறப்பும்
மன்னர்முதலானவர்கள் வாழ்வுமவர்வாழ்வும்
மன்னுமுயர்வானமதில் மாரிவளமாமன்றோ

இல்லறம்.

வெல்லறங்கள்செய்துகன வேள்விமுடிந்தாலும்
இல்லறத்தின்வாழவுக் கிணையாவதொன்றுமில்லை
மூர்த்தியென்றமூவருக்கும் முன்னாளிறந்தவர்க்கும்
பார்த்திபர்க்குந்துறந்தார் பலமுயற்சியாளருக்கும்
இயல்பினாலில்லா ரிவர்க்குத்துணையெனவும்
நயமாகுமென்றுகுற ளானதிலேசொல்லினரே
மட்டில்லாவாழ்விருந்தென் மனைதனக்குமுக்கியமாம்
இட்டமுறுபெண்சாதி யென்பவளேமுக்கியமாம்
சற்குணமுந்தெய்வபக்தி தர்மசிந்தைகற்புடைமை
இக்குணங்களுள்ளா ளிருக்குமந்தவீட்டினிலே
வற்றாதுசெல்வமவள் வாயால்மாரிபெய்யென்று
உத்திரஞ்சொன்னா லுலகமெல்லாமாரிபெய்யும்
தானுமனையாளுமொரு தர்மமதுசெய்யநன்று
தானவர்கள்வேறுபட்ட தர்மமதுதர்மமல்ல

செல்வநிலையாமை.

நினைத்தபொருணீங்கி நினையாப்பொருளொன்று
மனைத்துமதுதானே யப்படியும்வந்துவிடும்
நிலையாகத்தோற்றுகின்ற நிலவதுவும்போயிருளாம்
கனஞ்சேரிருணிலவாய்க் காட்டுதற்கப்பாலும்
இரவும்பகலாகும் பகலுமிரவாகும்
பெரிதானமேடங்கே போறாயாகிவிடும்
ஆறதுவுமேடாகும் மணல்நிலத்திலோடம்வரும்
வாரிசுவரியதில் மணலும்கச்சூடாகும்
வேண்டுநிதியோ ரெளியோருமாவார்கள்
மீண்டுமெளியோரு மேலோருமாவார்கள்
தகைமைசெறிவாழ்வுந் தாழ்வுஞ்சதமல்ல
சகடுபோற்சுற்றிவருந் தாழ்வதுவும்வாழ்வதுவும்

தெய்வச்செயல்.

பேராசையாலே பிரயாசைபட்டாலும்
வாராதுவாராது வருவதும்போகாது
எங்கெங்கேபோனாலு மியாவரிடஞ்சென்றாலும்
பங்கமுறைத்துப் பலரைமிகநொந்தாலும்
அழுதுதொழுதாலும் அநேகநாள்தெய்வத்தைப்
பழுதாயுரைத்தாலும் பயனேதுமெய்தாதே
ஆழக்கடலி லமுக்கிமுகந்தாலும்
நாழிவரும்நாழியிலே நானாழிநீர்வருமோ
பூர்க்குமரஞ்செடிகள் பூவாநாட்பூவாது
ஆர்க்குமவிதியையன்றி யாசையினால்வாராதே
ஆலிற்புறாவிரண் டங்கிருக்கவோர்வேடன்
சீலமுடனெய்வதற்குச் சிலையிற்கணைதொடுக்க
பாயவந்தராசாளிப் பட்சியதுமேலுலவத்
தாயபுறாவின்மேற் றொடுத்தகணைவிலகி
ராசாளிப்பட்சியுட லானதிலேதைத்துவிழ
பாசமுறுவேடன் பதத்தில்விஷந்தீண்ட
வேடனும்ராஜாளியுமாய் வீழ்ந்துவிடவேயொரு
சோடாய்ப்புறாவிரண்டுந் துன்பமற்றுவாழ்ந்ததுவே
இத்தகைமையாய்முடியு மீசனசெயலாலதற்கு
அத்தாட்சியாமென் றருளினார்முந்நாலோர்
அண்டரமுதுண்ண வரனுமநஞ்சையுண்டான்
கொண்டல்வண்ணன்காடுரைந்து கோதைதனைப்பிரிந்தான்
வேதன்சிரமிழந்து மிப்பாற்சிறையிருந்தான்
ஆதியிலேயிந்திரனு மங்கமெலாங்கண்ணானான்
சக்கிரேசனானவரிச் சந்திரனும்பெண்டீரும்
மிக்கதொருநாடிழந்து விலைபட்டுத்துன்பமுற்றார்
மன்னுநளராசன் மனைவிதனைப்பிரிந்து
தன்னுடையநாடிழந்து தன்வடிவுகுன்றினனே
ஐவரடவியுற்ற ராகையாலாரேனும்
வெய்யோனவிதிதனையே வெல்லயெவரால்முடியும்
பூபாரந்தீர்த்த புயல்வண்ணன்வேடன்கை
ஆபரணம்பட்டிறன்று வாதைக்குள்ளாகினனும்
ஆனைபறவையுட னரவமிம்மூன்றும்
சேனைமணிதர்கையிற் சிக்கிமெலிவதுவும்

நல்லகதிர்மதிகள் ராகுகேதாற்றுயருறலும்
வல்லதர்மவானுக்கு வருமைவந்துருழுவதும்
பாக்கியமுள்ளானுக்கோர் பாலகனில்லாததுவும்
போக்கற்றவேழைக்குப் புத்திரருண்டாவதுவும்
நல்லோர்க்குப்பொல்லாத லண்டப்பெண்டாவதுவும்
பொல்லார்க்குநல்லகுணப் பெண்மனைவியாவதுவும்
ஓரொன்பதொன்பதிது ஆழிவிதிப்பயனும்
வீரர்க்குமேலவர்க்கு மின்பதுன்பஞ்சமனும்
ஆகாச்செயலுக்கு மயலார்பொருள்தனக்கும்
வாகாகவாசைமிக வைத்தால்வருவதில்லை
வாழ்வதுவுந்தாழ்வதுவு மன்றுவருமின்றுவரும்
ஊழ்வினையின்வாறன்றி யுத்திபுத்தியாலாமோ
ஏலவேவந்துபோ மின்பதுன்பமதுபோல்
ஞாலமிசைப்பின்னு மிவைரண்டுமனுபவிப்பார்
காலித்திரளிலொரு கன்றனைதைவிடுத்தால்
பாலித்தேயீன்ற பசிவறிந்துசேருதல்போல்
ஓடியொளித்தாலுமங் குற்றபழவினைதான்
தேடிப்பிடிக்குமென்று செப்பினார்முன்னோர்கள்
எக்காலஞ்சென்றாலு மிறவாதபேரில்லை
மிக்கவதிசயத்தை வெல்பவர்களாருமில்லை

சுகபோசனம்.

தாளாண்மையென்னுந் தகைமைதனைச்சீர்தூக்கில்
வேளாண்மைக்கேயதிக மில்லையென்றுசொல்வினரே
வேந்தர்தமையடுத்தோர் வேளாண்மைசெய்பவர்கள்
சார்ந்தவனமலைகள் தன்னருகில்சஞ்சரிப்போர்
மருவாருஞ்சந்தன மரம்வனத்திற்சமுத்திரத்தி
னருகேயிருப்பவர்களாவின்பாலுள்ளவர்கள்
சகடுடையாக்கிரை தன்னைபயிரிடுவோர்
மிகவுமிந்தவெண்மருக்கு மேலானபஞ்சமில்லை

கற்சகோதரர் துற்சகோதரர்.

தம்பியர்மேலன்புடையோன் தர்மருராமர்
தம்பிமேல்சத்ராதி தசக்கிரீவன்வாலியுமாம்
நற்றுணையார்தம்பியர்கள் லட்சுமணன்பரதன்
உற்றவொருதர்மருடன்பிறந்தநால்வர்களாம்

சுக்ரீபனுணவனுஞ் சுயோதனன்விபீஷணனும்
தக்கபுகழ்பூவுலகில் தமையனுக்குச்சத்ராதி
பண்பாவுடன்பிறப்பிற் பகையுறவிதாகுமென்று
முன்பாகநீதிநூல் முறையிலுரைத்தனரே

அரசரிற் புகழ்பெற்றோர்.

மனுவிட்சுவாகுவுடன் வாகான அம்பரீஷன்
சனகைபெறுமாந்தாதா கார்த்திகார்ச்சுனன்பரதன்
விருத்தச்சிபியுடனே விந்துச்சிவிந்துவுடன்
மருத்தப்பகீரதனும் வாணன்முசுகுந்தனுடன்
தீராப்புகழ்யாதி தேவேந்திரனுடனே
பாசிற்றசாதனும் பாண்டவர்களைவர்களும்
சத்தியவரிச்சந்த்ரனுட தாதைதிருச்சங்கு
உற்றநளன்விதுரனோ கோபுரூரவனும்
அந்நாளிலேபிரகலாதனுடன்மாபெலியு
மன்னுஞ்சடாயுகுகன் வாகாம்விபீஷணனும்
ஆறைந்துபேரு மதிகபூசாபலராய்ப்
பாரிற்புகழ்நிறுத்திப் பரமபதமுற்றவராம்
ஏற்கைபெருந்திரளிலெழில்விஸ்வாமித்திரமுனி
மார்க்கமுடன்மாணிக்க வாசகருமாபெலியும்
வின்னமில்லாவள்ளுவரும் வேடனென்னுங்கண்ணப்பன்
தன்னுடனெழுவர்களுந் தானவராய்ப்பேறுபெற்றார்

நல்லறிவு.

தீயினாற்சுட்டபுண் தீருஞ்சிலமருந்தில்
வாயினாற்சுட்ட வடுவொன்றுமாறாதே
ஏற்கையுடன்புகழோ டெய்தாதசென்மமவன்
தீர்க்கமுடனேமறு ஜென்மமெடுக்காமைநன்றாம்
மண்ணிற்பிறப்பதெல்லா மாநிலத்தேவகாட்டுந்
தண்ணமுளவாய்ச்சொல்லாற் சாதியறிந்திடலாம்
சிறியோரிணக்கம்விட்டுத் தீங்கொன்றுஞ்செய்யாதே
பெரியோர்தமையடுத்தாற் பேதமொன்றும்வாராதே
துய்யகிரகம்நித்திய சோபனத்தினால்விளங்கும்
வையகத்துராசாக்கள் மனுநீதியார்செலிப்பார்
நாரியர்கள்சற்குணத்தினாலேவிளங்குவார்கள்
கூறும்விதரணனுங் கொடையால்விளங்குவனும்
பாரிலெந்நாளும் பகல்விளங்குமாவிரவிற்
காரிருளையும்விளக்குங் காந்தியுமாமதியாம்

பதிவிளங்குப்பொன்னாலே பார்விளங்கும்மேகமதால்
சதுராம்பகைவிளங்குந் தங்கள்புயவலியால்
குடியேவிளங்குவது கொற்றவர்களால்நீதி
நெடியதலம்விளங்கு நெஞ்சிலுற்றநல்லறிவால்
புகழாற்கொடைவிளங்கும் போசனத்தாலுயிர்வழங்கும்
புகழுரியநன்னூலாற் புற்றிமிகவேவிளங்கும்
சொந்தமென்றதுற்சனரைத் தோழமைகள்செய்யவொண்ணாச்
சந்தேகமுற்றதொரு னைதயலரைச்சேரவொண்ணா
சார்பில்லார்க்கில்லைநிலை தயவிலாற்கரமுமில்லை
ஊரில்லார்க்கரசமில்லை ஊணில்லார்க்குறுதியில்லை
மாடில்லாதார்க்கிந்த வையகத்தில்வாழ்வுமில்லை
கூடுமுதலில்லார்க்குக் கொள்ளல்விற்றலிலாபமில்லை
துற்சனர்க்குநேசமில்லை சுகமில்லார்க்காசையில்லை
இச்சகத்தினன்மைதனக் கெப்போதறிவுமில்லை
மனதின்குறிப்பை வதனத்தாலறிந்திடலாம்
அனைவோர்குணநடத்தை யதனாலறிந்திடலாம்
சமர்முகத்திற்சூரன்வலு தன்னையறிந்திடலாம்
தமர்சேரும்வல்பிணியைத் தாதாலறிந்திடலாம்
கல்விப்பிரசங்கத்திற் காணலாங்கவிஞர்திறம்
சொல்வண்மையாற்சாதி தோற்றமறிந்திடலாம்
மாநிலத்தில்பூண்டுகளை மழையாலறிந்திடலாம்
தானுநல்லார்பொல்லாரைச் சந்ததியாற்கண்டிடலாம்
கண்ணிரண்டாம்யாவருக்குங் கற்றோர்க்குமூன்றுகண்ணாம்
எண்ணுந்தியாகிகளுக் கேழுகண்ணாகுமல்லோ
மனங்குவிந்தஞான மகிமையறிந்தவர்க்கு
அனேகங்கண்ணாகு மென்றருளினார்முன்னோர்கள்
தர்மவான்றன்னிடத்திற் றங்காதுபாவமுந்தான்
கர்மிதுன்மார்க்கரிடங் கனத்ததாமநில்லாது
நெருப்புக்குமுன்னிருளு நில்லாதுதான்மிகுந்த
கருத்தவிருள்மணியுங் கதிரோன்முனில்லாது
சத்தியத்தைநாளு மசத்தியமும்வெல்லாது
கெட்டகோபம்பொறுமைதனை வெல்லாது

புண்ணியத்தைப்பாவமொருபோதுமேவெல்லாது
மண்ணில்விஷங்கெருட மந்திரமுநில்லாது
சந்தனங்கஸ்தூரி தாம்பூலமாடைமுதல்
விந்தைசேரியாபரண மிவற்றையெவரீந்தாலும்
ஏற்போரொருகையா லேற்றுரேயாமாகில்
கூர்ப்பாய்க்கொடுப்பவர்க்குக் குறையாதவாயுசுண்டாம்
செகமுழுமையுந்தானே தேவாதீனமாகும்
மகவானதெய்வமது மந்திராதீனமாம்
மந்திரமாமதுவே மாமறையோராதீனம்
சந்ததஞ்சேர்மறையோர் சகலருக்குந்தெய்வமென்பார்
பாலன்னமானாலும் பண்பில்லாக்கூழெனிலும்
மேல்சுத்தமாய்க்கால் மிகவறிந்துண்ணனன்று
நல்லோருக்குற்றதுயர் நன்மைசற்றுமில்லாத
பொல்லாதான்வாழ்வுமொருபோதுநிற்கமாட்டாதே
பாம்புகடிநெடுப்பிற் பழகிப்பிழைப்போர்கள்
மேன்பாடுக்கொப்பாகு மென்றார்மனுநூலோர்
வைமைக்குந்தோன்ற உபாயங்கள்சொல்லுவதும்
காருக்குஞானக் கதையெடுத்துசாற்றுவதும்
துட்டனுக்கெத்தனையோ சொல்லிநன்மைசெய்ததுவும்
முட்டாளுக்குற்றநிச முள்ளதைச்சொல்லுவதும்
இன்பக்கவிகடனை ஈயார்மேற்பாடுவதும்
அன்பில்லாசோரஸ்திரீ யாசையால்மெலிவதுவும்
கலத்தைக்கொடுப்பதில்லை நன்றாசாதிவ்வாறும்
மலைக்கல்லிலேயெறிந்த மண்பாண்டமாகுமல்லோ
ஐந்தானபாவத்திலானாலிரண்டுநலம்
ஐந்திலேமூன்றை யவ்வைசொன்னாளாகாதாம்
தெய்வத்தாலாகா தெனினுமுயற்சியிலே
மெய்வருந்தக்கூலிதரு மென்றனரேமுன்னூலோர்
இத்தனைநாள்நம்வீட்டி லேற்றும்விளக்கென்றணுகி
முத்தமிட்டாற்கன்ன முடையெழும்பச்சுட்டுவிடும்
உற்றகுலத்தெய்வநமக் கொன்றுசெய்யாதென்றுபொய்யாச்
சத்தியமும்பண்ணினாற் றன்விடவுமாட்டாது
தூங்குவதுபோலுந் தூங்கிவிழிக்கின்ற
பாங்கதுவுமாமிந்தப் பாரிற்பிறப்பிறப்பு

கூட்டினுள்ளேயிருந்த குருவிபறப்பதுபோல்
தேட்டமுடம்பினிலே சீவனிருந்தேதுசெயல்

கொல்லாமை.

கொலையென்றுநெஞ்சிற் குறியாதான் வாணாள்மேல்
மலையாயுயிருண்ணு மறலிவரமாட்டானே
நல்லோர்பெரியோர்க்கு நாயகமேயாவரெனில்
கொல்லாமையென்பதனைக் குறித்தறிந்தவுத்தமராம்
தானாதிபதிநாதன் தந்தைதாய்சற்குருவு
மானார்மனையாட்டி மறையோர்புராணிகரை
சுத்தமுள்ளவீரர் துலங்குகவிவாணர்
உற்றதபோதனர்க ளுயர்குலத்தோர்பாலர்கள்
சால்விசுடப்பிர சங்கிப்ெணியாளர்
ஞாலமிசைவறுமை யாளர்பதினெண்மரையும்
எப்பிழைகள்செய்தாலு மிராசர்முதலானவர்கள்
சர்ப்பனையுந்தண்டனையுந் தான்செய்யலாகாதே

கொடுநரகடைவோர்.

நீதியுள்ளராசர்களை நீதிவழக்குரைப்போரை
ஆதிகுருவானவரை யவருடையசிஷரையும்
சோடஞ்சொல்வேதியரைத் துன்பங்கள்தீர்த்தவரை
யோதரியபண்டிதரிவ் வோரெழுவர்தங்களையும்
நிதானவஞ்சகங்கள் செய்தாரேயாமாகில்
தீதாய்க்கொடுநரகிற் சேர்வார்கள்திண்ணமிதே
அன்னமளித்தவருக் கவகேடுசெய்தவர்கள்
மன்னர்தமையடக்கி வைத்தவமைச்சர்களும்
நன்றிமறந்தவரும் ராசாக்களைச்சமரில்
ஒண்டியாய்விட்டே யொளித்தோடிப்போனவரும்
மாதாபிதாகுருவை வசையாய்நிந்தித்தவரும்
வேதாந்தமாதவத்தோர் மெய்நோகவைத்தவரும்
தெய்வமிகழ்ந்தவரும் சின்னமுதலாகப்
பொய்சொல்லோரன்னியாயம் பொருட்காசைப்பட்டவரும்
பாரில்விசுவாசப் பாதகமேசெய்தவரும்
நேருண்டவீட்டுக் கிரண்டகங்கள்செய்தவரும்
பன்னிருவர்தானும் பரிதிமதியுள்ளளவும்
நன்னயமில்லாத நாகிற்குடியிருப்பார்

சோதிடஞ்சொல்வோருந் தொடுவழக்குதீர்ப்போரும்
பேதமில்லாபண்டிதரும் பிராயசித்தம்விதிப்போர்
நீதியுரையாம லிரண்டகமாய்ச்சொல்வாரேல்
ஆதீனமும்பாழாம் பாழ்நரகமெய்திடுவார்
பார்க்குமலைகடலின் பாரமதுபாரமல்ல
பார்க்குவிசுவாசப் பாதகனுமென்பவனும்
கற்றதுரோகியுடன் காணுமிவரிருவ
ருற்றசுமையேயென் றுலகமாதஞ்சுவளாம்
அக்கினியிலேயமிழ்ந்தோ ராறுபோராமிவர்க்கு
மிக்கதொருகொடிய வியாதிவரும்பின்னரகம்
தண்ணீரிலம்மணமாய்த் தான்போவோரதிற்புணர்ந்தோர்
உண்ணீரிலேயுமிழ்ந்தோ ருறுமலமும்நீர்விடுத்தோர்
அசுத்தமுடனே தா னாலயத்திற்செல்வோர்கள்
நிசமாகச்சந்ததியி னேராய்க்குடியிருப்போர்
போற்றுகின்றதேவதையின் பூசைக்கெனக்கொணர்ந்து
சாற்றுதபுட்பந் தனையெடுத்துச்சூடினவர்
தீராப்பிணியடைந்து செகத்திலிம்மூவர்களும்
மாறாவறுமையுமாய் வன்னரகஞ்சேர்வார்கள்
மேற்குலத்துகீழ்குலத்து மினனாருடன்பிறந்தோர்
ஆகுலமுண்டாகி யழியவர்குலவிர்த்தியற்று
கண்சாறுக்கெய்தாக கடுஞ்சொல்லைச்சொன்னவர்கள்
மண்மேல்குலத்தோடு வன்னரகஞ்சேர்வார்கள்
கெடுமதியாலெடுத்தவர்க்குக் கேடுநினைத்தவர்கள்
குடும்பமுமேநாசமாய்க் கொடுநரகஞ்சேர்வார்கள்
மன்னர்கிருப மதுதனையோர்தள்ளியிட்டோர்
அன்னைதந்தைசுற்றத் தவர்கள்தனையடிப்போர்
எளியர்தனையடைந்தோர் யிகல்புரியும்வஞ்சகர்கள்
பழியாளர்கோளர் பழிபுனையரெண்மரையும்
மண்டலத்தில்மூன் றுபிழை மட்டும்பொருத்தப்பாற்
தெண்டனைகள்செய்வதுவே தேசமன்னர்நீதியதாம்
உரியவிவகாரம்வந்தா லுற்றார்பகைஞரென்னும்
பரிதானையெய்துசம் பந்தரிவரேழையென்றும்
பாராமல்நீதியாய்ப் பாங்காய்விசாரித்து
கூராய்ச்சமன்செய்த கோல்போலிருதலையும்

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106
TAMILNADU - INDIA

இறையாரிறந்தவர்க்கு நீடூழிகாலம்வரை
குறையாமல்வாழ்வுமவர் குலமுமிகவிர்த்தியுண்டாம். ௨௪௰

துஷ்டசங்கிரகம்.

சாதிமுறைதவருஞ் சண்டாளர்கற்புடைய
மாதைவிரும்புவிசு வாசமில்லாபாதகர்கள்
கோள்கள்மிகுந்தவர்கள் கொலைஞரொடுமூர்க்கர்
காளும்பகையாளர் நாசனத்துரோகிகளை
ஏழைதமையடித்தோ ரிகல்வினையுஞ்சண்டைகளைச்
சூழும்பிணிகளொடு துஷ்டமிருகந்திய
கொண்டமைதீராத கோபம்பதினாறு
மன்றடக்குவதல்லா லதிகரித்தால்வெல்லறிதே
துற்சனரும்பொன்னுந் தூரகதமுந்தோற்கருவி
மிச்சமுறுநரம்பின் வெங்கலமாமுக்கருவி
மானமில்லாமூளிக்கு மானாரவர்களையும்
ஈனமில்லாக்கரும்பு எள்ளுடனேயிரைந்தும்
தெண்டித்தார்க்கெல்லாஞ் செயங்கொடுக்குமின்றிவற்றை
பண்டுவட நூலிற் பகர்ந்தாரேமுன்னோர்கள்
தந்தைதாயானாலும் தன்குலமெல்லாம்விளங்கும்
மைந்தனேயானாலு மனையாட்டியானாலும்
மந்திரியேயானாலும் மரபுள்ளோரானாலும்
பந்தமுடனமக்குப் பகையாளியென்றறிந்தால்
அன்றேசுகத்திடினு மாக்கினைகள்செய்திடினும்
கொன்றாலும்பாவங் கொலையுமில்லையென்றனரே. ௨௫௰
கோழைமிஞ்சும்வஞ்சகரை சொற்கேளாமைந்தர்களை
மீளாச்சமர்முகத்தில் விட்டோடுஞ்சேவகரை
மன்னவர்க்குவஞ்சகஞ்செய் மந்திரியோடிவ்வறுவர்
தன்னைகொடுந்தண்டனையுஞ் சதியுமிகச்செய்திடலாம்

நல்லறிவு.

பூமிக்கரசர்தெய்வம் புருஷனேபெண்கள்தெய்வம்
காமிக்குமாதர்தெய்வங் காசுபணமேலோபிதெய்வம்
தாரித்திரனுக்கு தனங்கொடுப்போர்தெய்வமிந்தத்
தாரணியில்துஷ்டருக்குச் சவுக்கடியேதெய்வமென்பார்
நீதியுடையோனுக்கு நேயரேதெய்வமதாம்
ஆதிபராபரமே யனைவோர்க்கும்தெய்வமதாம்

அன்னைதந்தைசுற்றத்தை யடர்ந்துமுனியவொண்ணா
பின்னொன்றுமின்னொன்று பேசித்திரியவொண்ணா
வஞ்சகரைநம்பவொண்ணா வாக்கிரண்டுபேசவொண்ணா
தஞ்சிப்பொறுமையிலாச் சண்டையினிற்போகவொண்ணா
வேணவித்தைகற்றாலு மேதினியிலேவிளங்க
ஆணவமாய்க்கொஞ்ச மாடம்பரம்வேணும்
நீதிநதிகண்மிக நீந்தியறிந்தாலும்
ஓடந்தனையகற்றி யுதகத்திற்செல்லவொண்ணா
ஞானமறிந்தாலு நாடொப்பனைகளது
வானதுபோலேநடந்து மகிமைபெறவேணுஞ்
செம்பொற்குபேரனெனிலுஞ் சீவனத்திலேமுயற்சி
பண்புடனேநாளும் பண்ணியிருக்கவொண்ணா
வாசமுடனேவெகுவாய் வல்லமையுண்டாயிடினும்
ராசாக்கள்சேர்வை நலம்பெறவேணுமல்லோ
உரித்தானபுத்திமதி யூகியேயானாலும்
பெரியோர்கள்சொற்கேட்டுப் பின்சென்றிருக்கநன்று
பெற்றபிள்ளைதான்மூடப் பிள்ளையேயானாலும்
சற்றாகிலுங்கல்வி தான்வரவுசெய்யநன்றாம்
மெலிவாகியேயதஷ்ட மில்லாதிருந்தாலும்
சலியாமலேமுயற்சி தன்னைவிடவொண்ணாதே
தீராதரோகமதால் தேகமெலிவுற்றாலும்
வீராயவிழ்தத்தை விட்டுவிடலாகாதே
தனியேபொருள்தேடித் தனித்துண்ணும்பாற்சோற்றி
லினையார்கிளையோடே யன்றுண்டகூழதிகம்
ஏதோர்மருங்கு மில்லாரிடத்திலே
பேதைகளாய்ச்சேவித்து பெறும்பொருள்கள்வாங்குவது
மானமரியாதையுடன் வையகத்தில்நல்லோராய்த்
தானுள்ளபேர்கொடுக்குந் தாம்பூலமேயதிகம்
வீணிற்பலவித்தை மெத்தவிரும்புதலி
லாணியாம்வித்தைக ளாக்கற்றுலொன்றுநலம்
இன்னமுயல்மான்கள் சிற்சிலதைவெல்லுவதி
லொன்னும்புலிக்குட்டி யொன்றைவென்றாற்கீர்த்தியுண்டாம்
அவிவேகியுடன்வெகுவா யானவுறவதிலும்
விவேகிபகையிருந்தால் மெத்தவதுநன்றாகும்

தன்னுயிர்க்குலந்தலையத் தப்புவிக்கவேண்டுதற்கும்
பின்னும்பிறருயிரைப் பேணிடவேண்டுதற்கும்
மையல்கொண்டமாதருக்கும் வையகத்திலஞ்சாமற்
பொய்யுரைத்தால்பாவமொரு போதுமில்லையென்றனரே
பின்னால்வெகுபொருளைப் பேராயளிப்பதிலும்
முன்னால்தருணத்தில் வீய்ந்தவரைக்காசுநன்றாம்
காலையென்றும்பின்னையென்றும் நாட்கெடுவுசொல்லுவதில்
வேளையினுவல்லபோ வென்றால்மிகவுநன்று
தெளிவானகல்விகற்றால் தேசம்வசியமதாம்
பழியாமரியாதை பாவலர்கள்தன்வசியம்
சித்தமதிற்பத்தியே தெய்வவசியமதாம்
உற்றப்பெருஞ்செல்வ முறவோர்தலைவசியம்
வேண்டும்பொருள்கொடுப்போர் வேசையர்கள்தெய்வமதா
மாண்டுகெத்திகாத்திருந்தா லரசர்வசியமுண்டாம்
சாந்தமொழுக்கஞ் சகலஜனவசியம்
வார்ந்தகமுநல்ல மனையாளுக்கேவசியம்
கூடியேவாழ்ந்தாலும் குழந்தைமிகப்பெற்றாலும்
தேடிப்பிதிர்களுக்குந் தெய்வத்துக்கிட்டாலும்
தானதர்மஞ்செய்தாலுந் தாழ்ந்தவர்க்குசொன்னாலும்
மானமுளநல்லோர்க்கு வணங்கிகடந்தாலும்
செய்தபிழைபொறுத்துத் தேசமதில்வாழ்பவர்க்கு
ஐயமில்லைவாழ்வதிக மப்பாலுங்கெற்பமதாம்
செய்தபிழைபொறுத்துத் தேசமதில்வாழ்பவர்க்கு
துய்யவயித்தியங்கள் சோதிடங்கள்தங்களிட
மருங்காயெவையுமங்கே வைத்துவணங்கநன்றாம்
வெறுங்கையாற்போனால் விழலாங்கருமமெல்லாம்
பாரிலொருதாயார் பலபிள்ளைபெற்றாலும்
சீருமழகுந் திரங்குணமும்வெவ்வேறாம்
பயிரிடுவோர்தங்களுக்குப் பாரில்வறுமையில்லை
தயிரியமுள்ளவர்க்குத் தானோர்பயமுமில்லை
உற்றசெபஞ்செய்வோர்க் கொருநாளும்பயமுமில்லை
நித்திரையில்லாதார்க்கு நேரும்பயமுமில்லை
தன்னவனுயிருந்து தப்பிதங்கள்செய்தாக்கால்
அன்னியனுமென்றெண்ணி யன்றேயகற்றநலம்

அன்னியனானாலுந் தன்புள்ளோனானக்கால்
தன்னவனாமென்றவனைத் தாபரித்துக்கொள்ளாமல்
நல்லோர்க்குமுன்னாளோர் நன்மைசெய்தாலதற்குப்
பொல்லாவொருநூறு பிழையும்பொருப்பார்கள்
அற்பர்க்கெழுநூறதிகநன்மைசெய்தாலும்
சொற்பவொருபிழைதான் செய்தார்பொறுக்காராம்
செய்ததவத்தளவே செல்வமதுவுண்டாகும்
எய்துங்குலத்தளவே யிருக்குமவர்கள்குணம்
கற்றோர்நலஞ்சிறந்த கன்னியர்களன்புடையோர்
நற்றவங்களுற்றவர்க்கும் ராசாக்களானவர்க்கும்
சாதிவரம்பெண்ணா தனுசரிக்கவேண்டுமதே
நீதிமுறையென்றுமநு நீதிநூலோதிடுமாம்
இன்பக்கவிமூட ரிடத்திற்படித்தாக்கால்
நண்பில்லைசற்று மதற்கும்பழுதுசொல்வார்
கற்றோருமைதனைக் கற்றோரறிவதல்லாற்
சுத்தமலடிபிரசூதியறிவாளோ
பஞ்சரித்துமேண பரிசுபெறுவதிலும்
மின்சொல்லாற்பிச்சை யெடுத்துண்ணநன்றாகும்
வீம்பானசத்ராதி மெய்யென்றிருப்பதிலும்
பாம்போடுறவுமிகப் பண்ணுவதேநன்றெனலாம்
கண்ணென் றுரைப்பதிரு கண்ணதுவுங்கண்ணுமல்ல
எண்ணப்படுதனை யெழுத்தென்பதுவேகண்
கைப்பொருளேபொய்ப்பொருளாங் காலவரைநில்லாது
மெய்ப்பொருளாந்தான்கற்ற வித்தைநீங்காப்பொருளாம்
வாழ்வுமிகவந்திடினும் வம்மிசத்தின்மார்க்கம்போல்
தாழ்ந்துநடப்பவர்க்குத் தாழ்வுசற்றும்வாராதே
யானைதனதென் றடாதுசெய்யப்போகாது
நீனுணைதமிருந்து நின்றாலுங்கேடெய்தும்
ராசருரியரென்று நடத்தைபொறுமைசெய்தால்
ஆசாரமேன்மையும்போ யவதியும்வந்தெய்திடுமே
இல்லாரையுள்ளவர்க ளேசியிழுக்குரைத்தால்
நல்லதல்லநஷ்டநயம் ராட்டினம்போற்சுற்றிவரும்
தேசமதிலேழைபர வேசியறைவேதியனை
ராசர்காவாவிட்டா னன்றல்லபாவமுமாம்

சாகாவரம்பெற் றவர்க்குப்பயமில்லை
வாகாகப்பேசாத மௌனிக்குச்சண்டையில்லை
வித்தைகற்றால்தந்தையால் மேதினியெல்லாம்புகழும்
கற்றதொருவித்தையது கற்பகத்துக்கொப்பாகும்
மெத்தவழகுடையோ மேற்குலமேயானாலும்
வித்தையொன்றுமில்லாவிட்டால் விரைவில்லாபூவாகும்
திருந்துமயிர்நகமுந் தேசமன்னர்பல்நான்கும்
இருந்தவிடம்பிரிந்தா லிவைகளுக்குமேன்மையில்லை
மின்னாரில்தாசி வேதியர்நாய்கோழியுடன்
மன்மைசேர்பண்டிதர்கள் சாருமொத்துவாழார்கள்
ஓங்குபொருட்சேத முயிர்சேதம்வந்தணுகில்
சாங்கமுடன்சிரித்தாற் றயிரியம்வந்திடுமாம்
தர்மசிந்தையுள்ளோர்க்குந் தயாளபுருடனுக்கும்
எம்மாத்திரம்பொருளு மில்லாளுமோர்துரும்பு
வீரமிகுசூரனுக்கு மேலவர்சேனைத்துரும்பு
பாரிற்றுறவிகட்குப் பார்த்திபனுமோர்துரும்பு
பெரியோருக்கற்பர்கைப் பிரயோசனம்துரும்பு
அரியகலைவாணியரு ளடைந்தோர்க்கவிதுரும்பு
நூற்றிலொருசேவகனும் நூற்றுப்பத்தாயிரத்தில்
பார்த்தாலொருவன் பாவாணனென்பவனும்
பாங்கானவார்த்தைசொல்வோன் பதினாயிரத்தொருவன்
நீங்காதகொடையாளி லட்சத்திலேயொருவன்
சினமென்பதென்பதொரு சிக்கமதையறுத்தால்
மனமென்பதென்பதற்ற வாறேமுடித்திடலாம்
அரிதானமாதவங்க ளனேகமாய்ச்செய்தாலும்
பொறுமையென்பதில்லாதேற் போமேவிழலாக
எத்தர்மமானாலு மெண்ணித்துணிதனன்று
மிக்கதுணிந்தபின்னர் மேலெண்ணினாலிழுக்காம்
பட்சிக்காசுபலம் பாலருக்கழுகைபலம்
மச்சத்துக்கேசலமாம் மன்னர்க்குதேர்பலமாம்
வாகனங்கள்தானுடையான் வழிநடைக்கஞ்சான்
வாதுடனேபாலுடையான் வந்தவிருந்துக்கஞ்சான்
வஸ்திரமுள்ளான்சபையில் வரப்போகவஞ்சானும்
உற்றபணக்கார னென்றுக்குமஞ்சானும்

மானிற்கவரி மயிர்தடுத்தாலேகாது
மானபரனவ்வாறுய் வசையணுவுங்கேளாணும்
மேஷந்தனக்கு மிரண்டுசெவியுமறுத்து
பாசபடத்தேக மயிர்முழுதையுங்களைந்து
குடுருட்டியும்பின்னே தொடர்ந்துவரும்வாரதுபோல்
கேடுகெட்டமாண்பர் கீர்த்திகளுக்கஞ்சாரே
மச்சுவீடாலநிழல் மாணுர்தனக்கோடு
நிச்சயமாய்க்கனற்று நீசர்மிவைகான்கும்
கட்டாகச்சீதள காலத்திலுஷ்ணமதாய்
இட்டமுடனுஷ்ணத்திற் சீதளமுமாகுமல்லோ
சாதித்தொழில்செய்வார் தனக்குக்கெடுதியில்லை
மாதவமாய்க்கால மறிந்துசெபஞ்செய்பவர்க்கு
ஏதேதுபாவங்க ளில்லையொருகாளுமென்று
நீதிமனுநூலி னிகழ்த்திஞர்முன்னோர்கள்
பொன்னைத்தரிசித்தாற் போகமதுசம்பவிக்கும்
வன்னமலரைச்சேர்ந்தால் வாசமதுசம்பவிக்கும்
பெரியோரைச்சார்ந்தவர்க்கு பெருமைமிகவுண்டாகுஞ்
சிறிதானதுற்சனரை சேர்ந்தவர்க்குகேடுவரும்
விண்ணதனிலேயிருந்து வீழுமழைத்துளிதான்
மண்ணிற்சுடுமிரும்பில் வந்துவிழுமுன்சவரும்
தாமரையில்வீழ்ந்தாற் றுழாதுயராது
சேமத்திரைகடலின் சிப்பியிலேவீழ்ந்தாக்கால்
விலைமதிக்கவொண்ணுத வெண்முத்தையேயீனும்
நலமீதிலிவ்வாறு சற்பாத்திரமறிந்து
கொடுப்பதேதர்மமிந்தக் கூறறிந்துசெய்யாவிட்டால்
விடுப்பாம்கொடுப்பதெல்லாம் வீணுகுமென்றனரே
காரிருளில்மரத்தடியிற் கண்டபழுதைதனைச்
சீருயர்பாம்பென்று செப்புவார்தப்பாமல்
உத்தமர்கள்தாசிவீட் டோரமாய்ப்போனுலும்
சத்தியமாயுத்தமரைச் சமுசயமாய்ச்சொல்வார்கள்
வீணுகப்போகா விடந்தனிலேபோகவொண்ணு
தோணுமற்போனுக்காற் றுன்பம்வரும்பின்னிழுக்காம்
தேசிவந்தாற்பசுவைத் தேடாரதிமோகத்
தாசிவந்தாற்றனது தாரமதைத்தேடார்கள்

ஆசையாலெப்பொருளும் அபகரிக்கவேண்டுவர்க்கு
ரோஷமில்லைகேடுகெட்ட லுத்தரிலும்லுத்தர்களாம்
அன்னைபிதாமூத்தோ னாசானரசனுடன்
பின்னைப்பெரியோர்கள் பிராணசினேகிதர்கள்
ஆகவெழுவர்களு மழையாதிருந்தாலும்
போகலாமேவலியப் பிழையொன்றுமீனமில்லை
மலைகானஞ்செல்லநன் றல்லாதுதான்தரித்த
கலைகிழித்துக்காவியிட்டுக் கௌபீனங்கட்டநன்று
ஓடெடுத்துவாங்கியே யுண்ணநன் றியாவர்களும்
நாடாவனத்தினிற்போய் நாடுவதுநன்றாகும்
ஈயாதலோபியிட மேறும்புலவருக்கு
ஞாயமிதுவென்று நவின்றாரேமுந்நூலோர்
வெள்ளாட்டியானவளை விரகத்தினாலணைந்தால்
உள்ளகுலமும்போ யொழுக்கமெல்லாங்கெட்டுவிடும்
வேசையரைச்சேர்ந்தாக்கால் வெட்கமில்லைபொன்தேகம்
ஆசையாலேவிதவை யானவளைச்சேர்ந்தாக்கால்
ஆயுசுமேதான்குறையு மகல்வாளிலட்சுமியும்
தூயபிறர்தாரத்தைச் கோரத்திற்சேர்ந்தாக்கால்
வன்னரகஞ்சேர்வரிவை யாகாதுநாலுமென்று
முன்னோர்வடநூலில் முறையாயுரைத்தனரே
செல்லுமிடமானாலுஞ் செல்லாவிடத்தினிலும்
பொல்லாதகோபமொரு போதும்வைக்கலாகாதே
இன்னவகையின்னா லெந்துமெய்தாதெனவே
தன்னிலறிந்துசெய்யா தாராகினஷ்டம்வரும்
கள்ளுண்டாலுற்ற காரணமெல்லாம்வெளியாம்
கொள்ளைவிரும்பிற் கொலைகள்வந்துநேரிடுமே
சூதாடியிம்மையிலே துன்பம்வருமல்லாது
சேதாரமாகுந் திரவியங்களுள்ளதெல்லாம்
ஆகாயவீதிக்கு ஆதித்தன்ரத்தினமாம்
வாகானகல்விகற்றோன் மகாசபைக்குரத்தினமாம்
சயனந்தனக்குரத்னஞ் சார்ந்தவழகுள்ளபெண்கள்
நயமானவீடதற்கு ரத்தினஞ்சற்புத்திராம்
ஏமனைவென்றாசய மேற்பவராயானாலும்
மேன்மைசெறிபெரியோர் வெம்பகையொன்றாகாது

ஆருக்குந்திருமா தனுக்கிரகமுள்ளளவும்
பாருக்குளெந்தப் பகையுநெருங்காது
கூடாதகாலங் குறுகிவருங்காலம்
வீடானதிலிருந்தும் வினைவிளையுந்தன்னாலே
தாரித்திரர்பசி தாங்குவதேமிக்ககொடை
ஏற்றபணக்காரர்க் கிவதுவேவட்டியுமாம்
எளியோருடனெதிர்த்தே யெண்ணமல்லவைவதிலும்
விழிகாணாதோடென்று விரட்டுவதேநன்றாகும்
அன்பில்லாதாரிடத்தி லதிகவரவதிலும்
பின்புமவருடைய பெருத்தபகைநலமாம்
வேண்டாப்பெண்டிரை வீணாவைத்தேசுவதில்
வேண்டாம்நீயென்று விரட்டிவிடலுத்தமமாம்
சாலவேவாழ்வுடையோர் சாவதற்கஞ்சுவாராம்
சாலவறுமையுற்றோர் சாவதற்கஞ்சாரும்
பாரிலீகையுள்ளோன் பாக்கியமெவ்வாறெனில்
பூருவபட்சப் பிறைபோல்வளர்ந்திடுமாம்
ஈயாதான்செல்வமது எத்தனையுண்டாயிடினுஞ்
சாயுமபரமபக்ஷ சந்திரன்போற்றேய்ந்திடுமாம்
என்னவறுமையுறினு மேற்பதொன்றில்லாவிட்டால்
அன்னவனேபாக்கியவா னாகுமென்றுசொல்லிடலாம்
பாரித்தசெல்வர்கள்தான் பாலர்க்குதவியில்லாவிட்டால்
தாரித்திரரென்று தப்பாமற்சொல்லிடலாம்
கையானதமது கண்ணிமேலகுத்திவிட்டால்
கையைத்தரிக்கின்ற காரணமுண்டோவதுபோல்
இளையோர்தமையடைந்தோ ரேதுகுற்றஞ்செய்தாலும்
பிழைபொறுக்கவேண்டுவதே பெரியோர்முறைமைபதாம்
அழகிளமைமூப்பு மயிஸ்வரியமிந்நான்கும்
வளமுடனேநம்முடைய மரணவரைநில்லாது
நன்னயஞ்சேர்பாலுடனே நல்லதண்ணீருங்கலந்து
அன்னத்தின்முன்வைத்தா லவின்பால்மட்டுமுண்ணும்
தண்ணீரைத்தள்ளுந் தகமைபோலேயுலகம்
விண்ணானமாயுரைத்தா லிந்நூலைப்பாராமல்
எண்ணியே நுண்ணியனா லெண்பதனைக்கற்றக்கால்
மண்ணிற்சுகமுமவரும் மறுமையிலேசொற்கமுறும்

இட்டமுறுமோகஸ்திரீ யேதிகழ்ச்சிசெய்தாலும்
திட்டியடித்தாலுஞ் சின்னம்வரமாட்டாது
இன்பம்பொருளுமிக வெய்துவதானாலுமதிற்
றுன்பம்வருமென்றறிந்தால் சொற்பனத்திலெண்ணவொண்ணா
பயனில்லாவார்த்தைசொல்லிப் பலநாளுங்கோளுரைத்தால்
நயவாயவர்செய்யுந் தர்மம்பலியாது
ஊரார்பகைதுன்ப மோயமகாவறுமை
மாறுதெனமுன்னாள் வள்ளுவனார்சொன்னாரே
வாழ்வுள்ளோரானாலு மாஞானியானாலும்
தாழ்வுள்ளோரானாலுந் தயிரியவானானாலும்
நாடொப்பனசெகிழ வாகாதொருநாளு
மூடத்தனமாக முன்பின்னுசெய்பவரும்
அருபியுமான அலகையோடொக்குமென்றும்
பிறகவரைச்செத்த பிணத்தோடேசேர்க்கவென்றார்
பொருளில்லாதார்க்கிந்தப் பூமியிலேகீர்த்தியில்லை
அருளில்லாதார்க்கு அவ்வுலகத்தேதுமில்லை
ஊன்தின்பவர்க்கு மொருபோதருளுமில்லை
தானதர்மஞ்செய்தாலும் சாம்பரிலேவிட்டநெய்யாம்
வாக்கிலொன்றுபேசி மனதிலொன்றுவைப்பதுவும்
காமக்குரோதமுற்றுங் கன்னியரைகாதலிப்பார்
மேன்மைச்சடைவளர்ந்து வெண்ணீற்றைப்பூசிடுவார்
தாடிவளர்த்து தலைமொட்டைசெய்திடுவார்
மகத்திவருமல்லவல்ல வாய்பிழைப்புக்குத்திரியும்
செகச்சாலக்காரரிவர் சித்தியொன்றுமில்லையென்பார். ௫௪௰

ஆவென்றபாவமொன்று மற்றார்பிறவியரும்
சீவன்முத்தனாகுமென்று செப்பினார்மூன்னாலோர்
பிறவுயிரைக்காத்தல் பேதமில்லாமனது
விரதபங்கமில்லாமை வெகுளாண்மையிந்நான்கும்
தவமிதுவாமென்றுந் தங்குமெஞ்ஞானமென்றுஞ்
சிவயோகியாவமென்றுஞ் செப்பினார்வள்ளுவரும்
மன்னவரேயானாலும் மற்றெவர்களானாலு
மென்னவிதமாயோ ரீடர்வருமென்றேயறிந்தால்

கைத்தானயமதனைக காருமற்போனுக்கால்
மகத்தானவாழ்வுகெடும் மாநிலத்திற்றுன்பமுண்டாம்
மாறிநிலையும் வல்பிணியுந்தீங்கோளும்
வேறுபகைவர்கள்வர மேலுமேவற்பகையும்
வாராதுதற்கால வகையறிந்துதீர்ப்பவரை
ஆராய்ந்தறிந்து அவரைத்துணைக்கொள்வதாம்
ஈகையில்லாமாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேமிருக மதனிலேசேர்க்கவென்றார்
தலமீதில்மிக்கான சாத்திரங்கள்கற்றாலு
மூலகவியற்கதனை யொன்றும்விடலாகாது
இல்லாதாரானாலு மிருந்துமூலகவளம்
வல்லமையாய்ச்செய்தவரே மாதவருக்கொப்பாகும்
வலியாரெளியாரு மானவான்மூவரிட
மலிவானகோபங்கள் வைத்தாரேயாமாகில்
நாடாளரம்லட்சுமியும் ராசர்பகைநேருங்
கேடாய்முடியுமென்று கிளர்த்தினாளவ்வையுந்தான்
எப்போதுங்கீர்த்தி சற்றுமில்லான்றனைச்சுமக்கும்
வெப்பினாற்பூமி விளைவுகுன்றிபோய்விடுமாம்
குற்றமில்லாமற் கொடுத்துபுகழ்ந்தேடாரை
செத்தபிணத்தோடே சேர்க்கவென்றார்வள்ளுவரும்

காலம்.

தந்தைதாயபுத்திசொன்னாற் றள்ளிமுனியுங்காலம்
நிந்தனையாய்சற்குருவை நிகழ்த்துக்கொடுங்காலம்
பெரியோரைதூஷணித்துப் பேய்க்குதவுமில்லாமல்
அறிவீனர்நிந்தனையா யகம்பேசுமிக்காலம்
மெய்யேபொய்யாங்காலை மேலோர்கீழாங்காலம்
பொய்யேமெய்யாகப் பொருந்துமிதுகாலம்
வஞ்சமரிலோடினவர் வரிசைபெருங்காலம்
அஞ்சியேயாளடங்கி யரிவையர்மேலாங்காலம்
இன்பமுறுநூல்படித்தா ரிகழ்ச்சியுருங்காலம்
பண்பில்லாசையாண்டிப் பாட்டைமெய்க்குந்தற்காலம்
இனிதானசற்குணர்க்கொன் றீயாக்கலிகாலம்
அனியாயக்காரருக்கு மடிக்குதவுந்தற்காலம்

பெண்டாட்டிவைதாலும் புருஷன்குறியாமற்
கொண்டாடிக்கொண்டிருக்குங் குலாமருக்கேயாங்காலம்
ஆணகலிகாலத் தடைவிதுவேயானாலு
மானபரானவனும் வையகத்திலுண்டெனலாம்
இருப்பார்க்கொருகடனு மெய்தாதகாலமுமாம்
ஒருக்காலுமீயார்க் குதவுவாரிக்காலம்
ஆசாரந்தர்மங்க ளங்கசுத்திமூன் றுமில்லார்
வேசைவெள்ளாட்டிகளே மேல்வட்டமாங்காலம்
தேடியிடுவார்களுக்குத் தேவியர்கிட்டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப் பெண்டுகள்வாய்க்குங்காலம்
சுகமாய்க்குடிப்பிறந்த சுதாகரர்க்குமேன்மைகொஞ்சம்
விபசாரத்திற்பிறந்தோர் மேலவராமிக்காலம்
கொண்டபெண்ணைவிட்டுக் கொடிதானலவ்வாடி
முண்டைகளைக்கொண்டலையு மூடர்மேலாங்காலம்
சொந்தமணவாளனையுந் தூஷணித்துச்சோரத்தில்
அந்திலகைலூர்சுற்று மவிசாரிக்காங்காலம்
மேற்குலமுங்கீழ்க்குலமும் விபசாரித்தில்மிஞ்சி
வாதுபெறும்வேசையர்கள் வறுமைக்குள்ளாங்காலம்
பிள்ளைவயதில்மிகுந்தாற் பிதாவினதுசொற்கேளான்
தெள்ளியதோர்வித்தைகற்றால் சீஷன்குருவைத்தேடான்
பெண்டானவள்ளியவள் பேச்சில்மிகுந்தாக்கால்
கொண்டுமணவாளனையுங் குறியாகவெண்ணாளாம்
பாரோர்கணோய்தீர்ந்தாற் பண்டிதரைதேடார்கள்
தீதானசெல்வம்வந்தாற் றெய்வமதைப்பேணார்கள்
தன்னுடையமாதா தமையன்மனையாட்டி
மன்னவர்கடன்றேவி மாமியாரானவரும்
தெய்வநிகரான தேசிகனார்தேவி
யைவரையுந்தாயென் றருளினார்முந்நூலோர்
பெற்றபெண்போலவே பேணிமருமகனை
வைத்தாதரித்து வருமாமியேமாதா
தந்தைதனைக்கிளைய தாரமந்தைகேசி
பிந்தவருஞ்சித்ராங்கி பிள்ளைகட்குசத்ராதி
பின்தாரப்பிள்ளையென் று பேதகமில்லாமனக்
குந்திதனக்கொப்பான கோதைமுதல்மாதாவாம்

பிதா.

தன்னையேபெற்றவருஞ் சற்குருவுமன்னவரும்
மன்னுந்தமயனுடன் மாமன்வளர்த்தவரும்
வித்தைதவருவித்தோர் வெங்கலியைத்தீர்த்தவரும்
மற்றுமொருவாபத்து வரும்போதுகாத்தவரும்
ஓரொன்பதுபேரு முற்றபிதாவென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்
கல்விவருவித்துக் கடனொன்றுமில்லாமற்
செல்வமுடன்வைத்த திறவானோர்தந்தையுமாம்

மைந்தர்.

அற்பராம்நூறுபிள்ளை யானாலும்பெற்றுமென்ன
சற்புத்ரனொன்றானாற் றலைமுறையெல்லாம்விளங்கும்
தந்தைதாய்வாக்கியந் தமயன்குருவாக்கியம்
சிந்தைதனிற்சத்தியமுந் தெய்வவிசுவாசமுடன்
இத்தகைமையாருடையோ னினியதசரதன்றன்
புத்திரனுக்கொப்பான புத்திரனேபுத்திரனும்
எத்தனைதான்செல்வத் தியல்போடிருந்தாலும்
புத்திரனில்லாவாழ்வு போசனமுநஞ்சாகும்
தந்தைதாய்வாக்கியமது தன்னைப்பரிபாலித்தோர்
சுந்தாதசாதனும் ராஜகுமாரனென்பார்
பிதாவுடையவாக்கியம் பிசகாதுகாத்தவன்றான்
சுதாகாரில்மிக்க சுதன்பரசுராமனென்பார்
ஆசான்றன்வாக்கிய மனுவுந்தவறுதான்
வாசாலன்சத்தியமுள்ள வாய்மையரிச்சந்திரனும்
தமயனுரைதட்டாத சற்புத்திரரானோர்
தமையுமங்கேசீர்தூக்கிற் றருமனுக்குகேரிளையோர்
தந்தைபேர்தன்பேருந் தாரணியிலேவிளங்கித்
தந்தையாய்சொல்மறுக்காத் தன்மையோன்புத்திரனும். ௪௪௰

தந்தைக்கிசைந்தமறு தாரமேதன்றாய்போல்
வந்தனைசெய்மைந்தர் மனுகுலத்துமைந்தரொப்பார்
நல்லார்பொல்லாரென் றிரண்டுவகையாயுலகஞ்
சொல்லுவனைவிந்திலுற்ற சுதாஸநிந்திடலாம்

சோசியம்.

உற்பவித்தநாளும்பின் னென்பதுடனென்பதுவுங்
வைப்போதும்வைக்கவொண்ணா வழிபோகலாகாது
வல்பிணியுந்தீருது மருந்துண்ணலாகாது
கல்யாணபெண்ணைமயிர் களைந்திடவுமாகாது
இல்லம்புகுத வினிதுண்ணலும்விவைக
ணல்லறங்கள்செய்திடவு நற்பணிகள்நற்றாசு
தானுந்தரிக்கவிது சார்ந்தநாளாகுமென்று
மேநாட்கணித விதியாலுரைத்தனரே
திங்கள்முதநாளுமது சென்றகடைநாளுடனே
மங்கையர்கள்பூப்புநாள் வாசியமாவாசியிலும்
சென்மநாள்மூன்றிலுஞ் சேயிழையைப்புணர்ந்தால்
தன்மமல்லவாழ்நாளுந் தன்குறையுநோயணுகும்
தலைக்கெண்ணைபோசனமுஞ் சவரமுடனித்திரையும்
நலத்தைக்கொடுக்குமந்த நற்கிழக்குதெற்கதுவும்
மற்றவிருதிசையு மாகாதுமத்திபமாம்
அந்தமழிவதல்லா லாயுள்விர்த்தியில்லையென்றார்

இலட்சுமியிருப்பிடம்.

மாயன்றன்மார்பினிலு மன்னரிடத்தினிலுந்
தூயதொருவில்வந் துளவங்கடப்பமலர்
தாமரையின்மீதினிலுஞ் சாகரத்திற்கங்கையிலும்
சேமமுறுமியானை தேசிமுகத்தினிலும்
ஊதுகின்றசங்கமுட னுத்திராட்சஞ்சாமரத்தில்
கேதனத்திற்றேரினிலே கெட்டபோதுன்னார்பால்
சுத்தமுள்ளவீரரிடஞ் சுத்தமாகியமனையிற்
சத்தியஞ்சேர்வாக்குடையோர் தர்மபரிபாலனர்கள்
அழகுஞ்சுசிகரமு மமர்ந்தகுணப்பெண்ணிடத்தில்
வளமைதரும்பசுக்கள் வாழுமிடந்தனிலும்
மாகனம்போல்சுத்த மானவிடந்தனிலும்
கோகனகமாது குடியிருப்பாளெந்நாளும்

மூதேவியிருப்பிடம்.

சோரஸ்திரீயிடத்திற் சூதகப்பெண்ணிழலில்
பாரக்கிடாவிற் பல்விளக்காப்பேயிடத்தில்

சூளைப்புகையிற் சுடுகாடெரிபுகையில்
காளையாங்காமுகர்பால் கழுதையிடத்தினிலும்
கள்ளிநிழலதிலுங் கைம்பெண்கடன்னிடத்திற்
கொள்ளிக்கரியுமியிற் கொட்டைநூற்பாரிடத்தில்
நீசர்நிழலில் நிட்டையில்லாரிடத்திற்
பேசுங்கடுஞ்சினத்தோர் பேடியிடந்தனிலும்
சுத்தமில்லாமனையிற் சுராபானரிடமிரவில்
வெற்றிபெருப்வேல் விரைவினிழல்தனிலும்
என்றுஞ்சுசிகரங்க ளில்லார்விதனைகள்
மொன்றியனைவோர்பா லுதயந்துயில்வோர்பால்
மூதேவியாளுநித மோடிக்குடியிருப்பாள்
மீதுணருந்துவர்பால் மேன்மைசற்றுமில்லாத
பாங்காகநாளும் பகற்புணர்ச்சிசெய்பவருந்
தூங்காதிடக்கையாற் றம்பூலந்தின்பவரும்
போசனங்கள்செய்கின்ற போதிற்சிரசினிலே
தூசுபுனைந்தண்ட துன்மார்க்கரானவரும்
காலையிலுமாலையிலுங் கண்டுயில்வார்தன்னுடனே
நாலும்போனவர்பா லட்சுமியும்நில்லாளே

பகை.

பாரம்பெரியகத்தி பஞ்சுதனக்கேநாளும்
சூரியனுஞ்சந்திரனுந் துட்டராவினால்மறையும்
சிற்றெறும்பால்யானை திகைக்குமதுபோல
அற்பரால்மேலோர்க் கவதிகளும்வந்தெய்தும்
தந்தைதாய்சொற்கேளார் தடுப்பார்கொடுப்போரை
அந்தக்கொடியோரு மட்டமத்திலேசனியாம்
சபையிற்பிரசங்கந் தன்னிற்பழுதுரைப்போர்
அபயமின்றிப்பேசல்மிச்ச மானதொருபெண்டிரும்
தாமாய்விரோதியுடன் றுணிவர்கள்மூவருந்தான்
சேமத்திலேவந்த செவ்வாய்க்கிணையெனலாம்
தன்னைமிஞ்சுமடிமை சந்திராஷ்டப்பங்குக்காய்
தன்னைச்சபையேற்றுந் தம்பிசென்மச்சூரியனும்
சகோதரற்குவஞ்சனைசெய் தமயனுமென்பவன்றன்
மகாபாவிமூன்று மிடத்துவியாழமதாம்

பார்த்திபர்கள்மெச்சவென்று பழுதுசொல்லிக்கொடுப்போர்
ஏற்றமிடும்பொல்லாத இராகுவுடன்கேதுவுமாம்
சாலக்கடன்பட்ட தந்தையருமார்க்கமனு
கூலமாயுட்பட்டுக் கொண்டுதிரியாதாரும்
வித்தையில்லாப்பிள்ளையுடன் வேசையாய்ப்பெண்டாட்டி
சத்துருவாகால்வாரென்று சாற்றினார்முந்நூலோர்
வேங்கைபதுங்குவதும் வேழம்பின்வாங்குவதும்
பாங்காய்பசையுறவும் பாம்புசாய்ந்தாடுவதும்
நல்லோர்பெரியோர்க ணயந்துவணங்குவது
மெல்லலிடச்சிரிப்பும் விழிமகிழுமின்னொளியும்
மிக்கானவில்வளையும் வேழமுறங்குவதும்
உக்கிரதளஞ்சமரி லொன்னலார்க்கொதுக்கும்
இத்தகையாமீறைந்து மெளிதாய்நினைக்கவொண்ணு
மத்திபமாயுயிர்க்கு வாதைகளுமுண்டாகும்
சொற்குற்றம்பாராட்டித் தொழுவழக்கைச்செய்பவர்போல்
பற்காட்டிச்சீவனங்கள் பண்ணித்திரிவதுதான்
வலிதானவாடரவின் வஞ்சப்படத்தினுள்ளே
எழிலாழ்ந்ததாரென் றியம்பினார்முந்நாலோர்
பண்பாய்க்கடுவுறவும் பண்ணவந்தநாமிது
பின்பவரையும்பிரிந்தார் பிணக்காம்பகைநேரும்
அங்கபங்கமானாலு மகுசியங்களானாலும்
தங்ககுலத்தேகு தாழ்வுற்றிருந்தாலும்
நிந்தைகள்சொல்லி நெகிழ்ந்துரைக்கலாகாது
எந்தக்குலமு மிழிவில்லாதில்லையில்லை
துன்பம்பழிபகையுந் தொடரும்பழிபிழைகள்
பின்பவர்க்குமெய்தும் பெருமைசற்றுமில்லாது

பகை வெறுப்பு.

நேர்ந்தவினைவலியு நேர்வார்கடன்வலியும்
சேர்துணைவலியுஞ் சீர்தூக்கிச்செய்வதுமாம்
கூடாதகாலமடைக் கொக்கதுபோலேயிருப்பாம்
கூடுமந்தக்காலமடைக் கொக்கதுபோல்வெற்றிகொள்வாம்
நட்பவெறும்பெலாங்கூடி நோக்காமலேயேற
கூப்பிருக்கக்குறித்த வுவறைசபனிவெல்லுதலாம்

மெள்ளமெள்ளப்பாய்ந்த நீர்முகக்கடுமலையின்
கல்லைக்கரைக்குங் கதைபோற்பகையறுதல். ௱௬௰
காலமதுவறிந்து காக்கைவெல்லுங்கூகைதனை
காலமதுதப்பினால் காக்கைதனை கூகைவெல்லும்
சிலநாளாயானையொரு தேங்காயினோடடக்கி
பலிதமுள்ளவேலைகண்டு பாகனையேவென்றதுவும்
பண்பாகக்காலமது பார்த்துபகைசெலுத்தும்
பண்பிதுவாமென்று பகர்ந்தாரேமுன்னோர்கள்
உற்றபகைவரென்று முள்ளாக்கிக்காரியங்கள்
பெற்றபிறகுமதை பேதமதைகாட்டுவதாம்
காலத்தின்சீலங் கண்டறிந்துகொள்ளாதார்
கோலமழிந்து குரங்காவார்தப்பாது

சேரிடம்.

சந்தனவிருட்சமதைச் சார்ந்தமரமவ்வாசம்
அந்தமகமேரணைந்த வக்காகமன்னிறமாம்
பாலில்கலந்தநீர் படிகமணிகுள்வடமும்
சாலமரகதக்கற் சாய்கைபட்டதிம்மூன்றும்
தன்னிறங்களைக்கொடுக்குந் தன்மைபோல்நல்லோரை
தன்னயமாய்ச்சேர்ந்தோற்கு நற்குணமேயுண்டாகும்
நல்லோரைக்காண்பதுவு நல்லார்சொற்கேட்பதுவும்
நல்லார்க்குணமுரைத்தா னன்மைகண்டானற்றுளம்
ஆசாரமன்பு மதிவடக்கமுள்ளோரை
தேசத்திற்கண்டு சேர்ந்தார்பெருமைவரும்
கதிரோனுதிக்கையிலே கண்டபெருஞ்சாய்கை
மதியமதிலேகுமது வாறுசிறியோரிணக்கம்
மதியந்திரும்பினபின் வாதிக்குஞ்சாய்கையைப்போல்
கதிராய்ப்பெரியோரைச் சார்ந்தாலேநன்மைதரும்
கற்றபெரியோருறவு கரும்புநுனியிலிருந்
துற்றதலைவேர்வரைக்கு முண்டருசிபோலாகும்
சிறியோருடனுறவு தின்கரும்படியிலிருந்
துதியநுனிவரைக்கு முண்டருசிபோலாகும்

செல்லாவிடம்.

கடலோடுங்கப்பலது கரையிலேயோடாது
புடவியிலேயோடுந்தேர் புனலிலேயோடாது

தண்ணீரில்முதலையதைத் தந்திவெல்லமாட்டாது
நண்ணுபுலிகாடன்றி நாடுற்றூர்கேட்டையும்
செல்லுமிடமிவ்வாறு திறஞ்செலுத்தவேண்டுமென்றிச்
செல்லாவிடந்தனிலே திறஞ்செலுத்தக்கூடாது

யோகம்.

மன்னர்மெச்சிக்கும் வரிசையதிகாரம்
பண்ணும்சாம்பிராச்சியமும் பட்டாபிஷேகமென்பார்
நல்லகுணமாகுமுன்னால் நாடிவலியவந்து
புல்கிடிலேயோகம் புத்தமிர்தசித்தமுமாம்
மண்ணிற்புதைத்தபொருள் வாதமுரைக்காசையுற்று
நண்ணுவார்கெய்தாமனண்ணூர்கட்கெய்துவதும்
மிஞ்சும்பயிர்விதைத்து விளைவுகுன்றிப்போவதுவுங்
கொஞ்சப்பயிரிடுவோர் கூடிவந்துவாழ்வதுவுங். நோய
கப்பல்வியாபாரங் கணக்குரைத்துப்போவதுவும்
சொற்பமாய்வாணிபஞ்செய் தோர்களுக்குகூடுவதும்
கணமற்காணமற் காவலர்கள்கேள்வியினால்
தோணுதலாய்வலியத் தொழில்கொடுத்துவாழ்வதுவும்
பேணளிற்றந்தைதாய் விட்டகுறையாகுமென்று
தானுமுன்னாள்செய்திருந்த தர்மமாவதென்னும்
அந்நாள்நற்பூவெடுத்து அர்ச்சனைகள்செய்ததென்றும்
இந்நாட்பெரியோருக் கியந்துவரப்பெற்றதென்றும்
லட்சுமிகடாட்சமிந்த நான்குவகையோர்க்குமென்று
உச்சிதமாய்முன்னோ ருரைத்தாருலகோர்க்குமென்று
திருமடந்தையேகில் சிறப்புங்கனமுமுண்டு
பொருளுநதரும்பாகும் பொல்லோருநல்லோராம்
செல்லாதவார்த்தைசெல்லுஞ் செய்யுமறியாதையுண்டாம்
எல்லாருமேபுகல்வா ரெதிராளியுமுறவாம்
கீழோருமேலோராய்க் கிளையுமிகவிர்த்தியுண்டாம்
தாழப்பெருங்காற்றுத் தண்ணீர்போற்குடித்தும்

மனஊக்கம்.

வீரப்புலியுயிரை விட்டாலேதோல்கொடுக்கும்
சூரனுயிர்போமளவுந் தோர்வையென்றுபின்வாங்கான்
உத்தமியேயெந்நாளு முயிர்க்குலையமில்லாமல்
சற்றுமினுமபிறர்க்குத் தன்னிபதத்தைத்தான்கொடுக்காள்

ஏற்கைபோய்ச்சாலவுந்தா னென்னதுன்பமுற்றாலும்
ஊக்கமதுகைவிட்டா லுயிர்க்குலயம்வந்தெய்தும்
உள்ளஞ்சிதராமலொன்றினையேகைப்பிடித்தால்
தெள்ளிமருளுஞ் சித்திமுத்திரண்டுமெய்தும்
பல்லரம்பினைக்கவொரு பலனேதுமெய்தாது
அலைவாய்த்துரும்பதுபோ லலைந்துகெடுஞ்சித்தியில்லை
ஐம்புலனையும்உரியோ ரடக்குவதுவேயருமை
செம்பொன்னெல்லாந்தேடித் தினங்கொடுப்பதேயருமை
தெண்டிக்கவல்லவன் சினம்பொருப்பதேயருமை
கொண்டகணவற்கிசைந்த கொம்பனையுமேயருமை
தேசமொன்றில்பேதைமன நிற்பதுவுமேயருமை
தேசத்திவ்வைவரையுந் தெய்வபிறப்பெனலாம்

அளவிலாமை.

பெருங்கடலாழம் புருஷயோகஞ்சூது
மங்கையர்கடன்மனமும் வஸ்துவின்றனிநிணமும்
வானளவுமாற்று மணலுமழைத்துளியும்
வானிலுறுகணமு மண்ணுண்டாராசாவையும்
உற்றபெரியோர்களுள்ளக்கருத்தளவுங்
கற்றோர்கருத்துங் காமன்கணையகலும்
மானிடர்கள்சென்ம மனுத்தொகையுமாமலையு
மானபருவதங்க ளனைத்துமதினிறையும்
பார்க்குள்ளேயிந்தப் பதினறுவல்லபத்தை
யார்க்குமடவிடவு மாகாதுகாவணரே
இறந்தார்பிறந்தார்க ளிவ்வளவாமென்றாலுந்
துறந்தார்பெருமைகளைத் துகையறிந்துசொல்லவொண்ணா
ஆயுள்நிதானங்க ளாறிரண்டிலேகிரகந்
தாயதிகரேனநிலை சொல்லயெவராலுமில்லை
சூரியன்முன்னிற்கலாஞ் சுடுமணலில்நிற்கவொண்ணா
ஆறணியுமீசர்முன்னே யஞ்சாமற்பேசிடினும்
தேசமதில்முக்யச் சிவனடியார்முன்புநின்று
பேசவரிதென்று பெரியோருரைத்திடுவார்
வாரியினீராழம் வானளவுமாமலையும்
ஆறின்கணமணலு மாகாசத்தேயுதவும்
அண்பாமினைந்து வளவுகண்டுசொன்னாலுங்
கொம்பனையார்நெஞ்சக் குறிப்பறியவொண்ணாதே

வெள்ளம்பறவைசனும் விலங்குடனேவேசையர்கள்
உள்ளமிவைநான்கு மொருவழியாய்நில்லாதே

உதவி.

வாவிநீரம்பலத்தில் வைத்தமரநிழலுந்
தாவுமணலூற்றுத் தண்ணீரின்பந்தலுடன்
பாங்கானசந்நிதியில் பழுத்தமரமானதுவுந்
தாங்கும்விபசாரி தனமும்நிலவினொளி
பார்க்குள்விவேகியர்கள் பாக்கியமிவரொன்பதுவும்
ஆர்க்குமுபகார மல்லாதுவீணலவே
நல்லோர்தேடும்பொருள்கள் நாவலர்க்கும்வேதியர்க்கும்
வல்லகுருவானவர்க்கும் மாதாபிதாவினற்கும்
புத்திரர்கடன்றனக்கும் போற்றுமித்தேவதைக்கும்
உற்றசகோதரற்கு முண்டென்றுநம்பினர்க்கும்
தர்மமேசெய்பவர்க்குஞ் சார்ந்தவறிஞருக்கும்
இம்மாத்திரப்பேர்க்கு மெய்துமிவர்பொருளே
இல்லந்தனக்குத்தன் னேந்திழையாளே துணையாம்
நல்லதேகந்தனக்கு நற்றுணைவரே துணையாம்
தேசாந்திரனுக்குச் சீர்துணையாங்கற்றகல்வி
மாசற்றிகபரத்தில் வருந்துணை தான்செய்ததர்மம்
வர்த்தகர்பால்வைத்தபொருள் மன்னவர்கடன்பழக்கம்
உற்றவிவேகற் குபகாரஞ்செய்ததுவும்
பருவத்தில்பெற்றபிள்ளை பக்குவத்திற்கற்றவித்தை
தருணத்திலீரைந்துந் தானுதவுந்தப்பாதே
என்னபகையானாலு மிடர்க்குதவிசெய்தல்நலம்
பின்னக்கவிசொலினு மேன்மைசெய்வரேபெரியோர். ௫௰

உதவாமை.

நாய்பால்சொரிந்துமென்ன நாணல்மிகப்பூர்த்துமென்ன
பேய்பொன்னைக்காத்துமென்ன பேடிகையிலாயுதமேன்
எட்டிப்பழுத்துமென்ன யீண்டுதழைத்துமென்ன
பட்டுபணிசித்திரத்திற் பண்ணியிருந்துமென்ன
சற்குணமில்லாப்பெண் தங்கநிறமாகியென்ன
மிக்கசபைக்கோழை மிகுகல்விகற்றுமென்ன

ஆட்டின்கழுத்திலதாமதுண்ணீண்டென்ன
காட்டினில்வெரித்தென்ன கானலினீர்கண்டுமென்ன
வேசைக்குப்பொன்கொடுத்தேன் வீணருக்குநன்றிசெய்தேன்
மாசுடையவற்பருக்கு வந்தென்னவதிகாரம்
காட்டுகொடிமயிற் கறுத்தநிறமாகி
நீட்டியிருந்தாலுமென்ன நெடுகக்குறையிலென்ன
இத்தனையாய்ச்சொன்ன விருதெண்ணிரண்டுமீயாத
லுத்தர்கள்தம்வாழ்விக்கு வொத்திருக்குந்தப்பாதே
தேகியென்போக்கீயாத தேடாதவற்குபொருள்
ஆகிவந்தாலுமென்ன அழிந்துபோனாலுமென்ன
பேடியழகுகண்டு பெண்கள்மகிழுவதும்
நீடுவஞ்சர்சொல்லை நிசமென்றிருப்பதுவும்
கானல்கண்டேயோடுங் கலைமானுஞ்சாவுயிர்ப்
பாயிலவுகாத்திருந்த பச்சைக்கிளியதுவும்
தேனருந்தத்தசனமலர் சென்றசுரும்பினமும்
தானுயர்ந்ததேன்கண்டு சப்பாணிவெய்ப்பதுவும்
புல்லர்களின்வாழ்வுகண்டு புகழ்பாடிப்போம்புலவர்
வல்லமைக்கொப்பென்று மனுனூலுறைத்திடுமே
கல்லாதவேட்டினிலே கண்டெழுதிவைத்தவித்தை
உல்லாசவேசையர்களுறவுசதமென்றிருக்கும்
மறுதேசம்போனபிள்ளை வஞ்சருடனேசம்
வருமென்றேயன்னியர்பால் வைத்தபொருள்பலனும்
தன்னைப்பெறுதவொரு தந்தைதாயானவரும்
பின்னுடன்பிறவாப் பின்னவர்கள்முன்னவர்கள்
பேறுகத்தம்வயிற்றிற் பெற்றிவளர்க்காதபிள்ளை
ஊருருடையசெல்வமுள்ளன்பிலாதபெண்டீர்
சத்தியமாயீராறுந் தருணுதருணமென்று
உற்றசமயத்துக் குதவாதுகண்டீரே
ஆற்றிற்கரைத்தபுளி யனலிலேபோட்டவெண்ணெ
காற்றிற்பரந்தபஞ்சு காட்டிலெரித்தநிலா
விரித்தசமரினிலே வீழ்ந்தவொருபெண்பாலும்
பரித்துகடற்சுழியிற் பாய்த்தடைந்தகப்பலுந்தான்
சுட்டமண்ணோனதிலே தெளிந்திட்டபந்நீரும்
இட்டமுடன்விழலுக் கிறைத்தவொருநந்நீரும்

வீணருக்குச்செய்தன்றி வேசைக்களித்தபொருள்
காணுமிலைவனைவந்துங் கைக்கூடாக்காரியமாம்
சற்பாத்திரமறிந்து தானஞ்செய்யாத்தருமம்
உப்புக்கால்தனிலு முவர்நிலத்திற்பெய்தமழை
பாம்பின்வாய்த்தேரை பரத்தைக்களித்தபொருள்
மேன்பாடுபெற்றபுவி வேந்தரிடஞ்சேர்த்தபொருள்
போனபொருள்நமன்கை புகுந்ததொருமன்னுயிரும்
ஆனைவாயின்கரும்பு மணைகடந்துபோனவெள்ளம்
வானிலத்திற்கொள்ளை பற்றிவரவையிலும்
வையகத்தில்வொன்பதுவும் வாறுதுவந்தாலும்
அய்யோவுலுத்த னரைக்காசுமீயானும்
கவரிமான்மயிருங் கற்புடையாள்ஸ்தன்னியமும்
அவையாதவேங்கையின்றோ லதிசூரன்கைவேலும்
ஆனாலும்லோபியொரு ளைந்தும்வரவுயிர்கள்
போனாலேயன்றியொரு போதினுமேகிட்டாது
கண்ணுக்கழகெட்குக் கனிதாழையின்கனியும்
வன்னமுருக்கின் மலரிலைபாலேதுபயஞ்
தாழைமடலேபெரிது சன்னமலமெடலாம்
கன்னமகிழமலர் சருகாககாய்ந்தாலும்
வின்னமில்லாத்தன்மணமும் விட்டகன்றுபோகாது
ஆழியில்நீதிக மள்ளியுண்ணலாகாது
ஆழியளிகூற்றவரு மன்னீருநன்னீராம்
இங்கிவற்றையொப்பாக ஈகைசற்றுமில்லாத
அங்கம்பெரிதா யழகாயிருந்துமென்ன
தேசமதுவில்லாவிடினுஞ் சிறியவுருவானாலும்
பாசமறுசற்குணமும் மலர்க்குதவியேபெரிதாம்
வேசையர்கள்நட்பும் விளக்கினதுவொளிவும்
மோசவலையிவ்விரண்டு மொன்றுகுமென்றனரே
கைப்பொருளற்றால்வேசி கடுகளவுநட்புமில்லை
மெய்ப்பாகயெண்ணையற்றால் விளக்கொளிவுசற்றுமில்லை

நற்சிறப்புத்தமர்.

பாவபுண்ணியமறிவார் பலபொருளுமிச்சியார்
பூவைபலனேக்கார் புராணநெறியுணர்வார்

மாதவங்கள்செய்தார் வன்கொலைகண்டஞ்சுவார்
சூதாடாரயாது துன்பத்துக்குள்ளாகார்
உய்யவேயிவ்வா றுடையவர்கள்சற்குராணம்
தெய்வத்தின்றத்துவமாய்ச் செப்பினார்முன்னோர்கள்
மாதாபிதாகுரு வானவரைத்தெய்வத்தை
மீதாய்ப்பணியும் விசுவாசமுள்ளவர்கள்
தன்தாரமன்றிமறு தாரந்தனைநோக்கார்
புந்திமகிழ்ந்துநிதி பூசைபுரிவோரும்
சத்யமொழிபூர்வ தர்மபரிபாலனர்கள்
சுத்தமுறுநந்தவனச் சோலையதுவைத்தவரும்
பார்க்குஞ்சகாயமதாய்ப் பாட்டைதனைச்சீர்திருத்தி
மார்க்கந்தண்ணீர்ப்பந்தல் மண்டபங்கூவம்வாவி
செய்யுமகாபுண்ணியத் தேகாதுமுத்தமர்க்கு
எய்யாமலைபோலே யாதுதுன்பம்வந்தாலும்
வெய்யில்தனைக்கண்டு விலகும்பனியெனப்போம்
கைலாசநற்பதமெக் காலுமிவர்க்குண்டாகும்
தாமரையின்மாமலருஞ் சவ்வாதுபுனுகுடனே
பூமருவுதேனும் புணரியுறசிப்பிமுத்தும்
பொன்னுங்கவரிமயிர் புகழ்சேர்கோரோசனையும்
நன்னயஞ்சேராவின்பால் நற்றாசுபட்டதுவும்
ஈதுபத்தானவகை யெங்கேபிறந்தாலு
மேதைபற்றார்போல்நல்லோ ரெக்குலத்தோராயிலென்ன
உப்புங்கர்ப்பூரமது வொன்றுபோலேயிருந்தும்
உப்புக்குங்கற்பூர முயர்ந்தவிலையாகுமன்றோ
எல்லோருக்கும்ரூப மொன்றாயிருந்தாலும்
நல்லோர்தமக்குநிகர் ராவரோபாவிகள்தான்
பங்கமுறச்சமூடர் படபடத்துப்பேசுவது
வெங்கலத்திலோசை விதமாகுங்கண்டீரே
நல்லதங்கத்தி னாதம்போற்சீருக
மெல்லமிருதுச்சொல் விளம்புவாருத்தமர்கள்
பன்றியைக்கண்டால்யானை பாதைவிடுதல்போல்
நன்றியற்றபேதையர்க ளாமோர்வரவுகண்டால்
அந்தவழிவிலகி யப்பாலேபோகுவது
சிந்தைதெளிமேலோர்கள் செய்கையென்றுசொல்

நன்னயஞ்சேர்பொன்னும் நற்பாலுஞ்சந்தனமுங்
கன்னல்தனையுமென்ன தண்டனைகள்செய்தாலும்
முக்குணமேகாட்டு முறைமையோர்பெரியோர்க்குத்
தக்கயிடர்வந்தாலுஞ் சற்குணம்போதாதே
சிவயோகியானவர்க்குச் சென்மமொருக்காலுமில்லை
தவஞ்சேர்ரசவாதி தனக்கணுவும்பஞ்சமில்லை
காலைதுயிலொழிதல் காணுசலேனிணர்ச்சி
மாலைமுழுகி மனைதனிலேசெல்வதுவும்
உற்றாரோடுண்ண லுபசோம்பலிவ்வாறும்
இத்தலத்தில்வாழ்வோர்க் கியல்பென்றுரைத்தனரே
உற்றபசுவானதுவு மோர்கன்றையேயீனும்
பத்தானகுட்டிகளைப் பயிலும்பெரும்புலிதான்
கோரமதுசெய்வதற்குக் கொம்பிருந்துமேபசுதான்
வீரமில்லாசற்குணத்தால் மேன்மைமிகவுண்டாகி
வங்கிஷமும்விர்த்தியாம் வன்புலியின்கோரத்தால்
பங்கமுறுகுட்டியது பத்தின்றும்விர்த்தியில்லை
நன்மைதுன்மைரண்டுமிந்த நாட்டினுக்குத்தாட்சியதாய்
உண்மையிதுவென் றுரைத்தார்மனுநூலோர்
தெய்வதரிசனங்கள் தெய்வவிசுவாசம்
பொய்யாததானதவம் புத்ரர்களையோடுணவு
பெரியோர்கள்சேர்மைகுலப் பெண்ணுளனுமேபோகம்
குறையாதசெல்வமுநோய் கொள்ளாததேகவிர்த்தி
தன்மையுடனீன்ற தாய்தந்தைசெய்தவமு
முன்னோர்செய்தபுண்ணியத்தின் முக்கியமென்றேயுரைத்தார்
வித்வான்களானவரு மெய்ஞ்ஞானமுற்றவரும்
வெற்பபுலிநகமு மேன்மையுள்ளபூனைமதம்
காரானைதங்கள் கவரிமான்றன்மயிருஞ்
சீராளவாறுமெங்கே சென்றாலுமேன்மையுண்டாம்
நாயானதுசினந்து நமைக்கடித்தால்நம்முடைய
வாயாலத்தைக்கடிக்கும் வாலுண்டோவையகத்தில்
அறிவில்லாமூட ரனேகமாய்வைதாலும்
பெரியோர்கள்வாய்திறந்து பேசாரொருக்காலும்
சற்குணத்தாலே தர்மமதுவந்தெய்தும்
துக்கம்வாராதவர்கள் துடங்கினதுங்கைவசமாம்

தாரித்திரமுமில்லை தக்கோர்பயமுமில்லை
பாரிற்புகழ்விளங்கும் பரகதியுமுண்டாகும்

நற்பிறவி துற்சனர்.

எண்ணுமல்யாதொன்று மியார்க்குமிடர்செய்வார்
எண்ணுமற்கொலைகளவுக் கிறைச்சிமுதலானதுபார்
பொய்யுரைக்கவஞ்சார் போசனஞ்முஞ்சாலவுண்பார்
மெய்யிற்பசியில்லா ரிராட்சதக்கணமாகும்
அஞ்சார்தனிவழக்கு யாவரையுமேமருட்டி
வஞ்சனையில்லார் வலியாரையாலும்
ருப்பகலுமாறுமல் நாரியர்தமைப்புணர்வார்
சாப்பாட்டொழுக்கமுடன் தம்முடம்புசுத்தியில்லார்
மாதலத்திலிந்த வன்னெஞ்சுடையவர்தான்
பூதகணம்பேய்க்கும் புறம்பாகுமென்றனரே
கொம்புளதுக்கைந்துமுழங் குதிரைக்குபத்துமுழம்
அன்பானயானைக்கோ ராயிரமுழத்தினப்பால்
வண்டிகண்டாலைந்துமுழ மப்பாலார் துற்சனரை
கண்டவுடன்சாத்தவழிக் கப்பாலேயோடநலாம்
பாம்புமுதலானதற்குப் பல்லதனிலேவிஷமாம்
வீம்பானதேள்தனக்கு விஷமதுவும்வாலினிலே
துற்சனரானவர்க்குத் தேகமெல்லாம்விஷங்கள்
மெச்சமென்றுசொல்லி விதித்தார்மனுநூலோர்
வேம்பிற்கசப்பும் மேவாமருக்கொழுந்திற்
சோம்பாமணமிரண்டுந் தோன்றும்போதுண்டான
வாறுபோல்துற்குணமும் வாய்புகழ்சற்குணமும்
மீனாப்பிறப்பிலன்றி யிடையிலொன்றும்வாராது
நாய்க்குநல்லபோசனமும் நற்பணியுந்தான்பூட்டி
ஏற்கவேகண்டிகையி லேற்றிவைத்துப்போனாலும்
கண்ணில்மறுநாயைக் கண்டவுடனேகுலைக்கும்
வண்ணம்போல்துற்சனற்கு வாராதுநற்குணந்தான்
எல்லாருந்தூஷணிக்க வெல்லாருங்கோனுரைப்பேன்
பொல்லாதகாற்றிற் பிடித்தெரியுமக்கினியாம்

பொல்லாரைக்காண்பதுவும் பொல்லார்சொல்கேட்பதுவும்
பொல்லோர்க்குணமுரைத்த போதிலேதீதாகும்
தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்
கர்மியவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாது
தலங்கள்தனைத்துதியார் தர்மகதைகேளார்
துலங்குநதிபாடார் சுவடிவாசித்தறியார்
வாசமிகுகீர்த்தியுள்ள மாணிடசென்மங்களிலே
நீசப்பிறப்பிவரை நேத்திரத்திற்பார்க்கவொண்ணா

நிறை.

தங்கமுருக்கிடினுந் தன்னொளிவுமங்காது
சங்கதனைச்சுட்டாலுந் தன்னிறமும்போகாது
சந்தனத்தையுரைத்துச் சலத்திற்கரைத்திடினும்
விந்தையுறுமணமும் விட்டகன்றுபோகாது
சாணையிலேமாணிக்கந் தகர்த்துமிகத்தேய்த்தாலும்
காணுமொளிவுமொருக் காலுமதுமங்காது
பால்முறியக்காய்ந்தாலும் பண்புசுவைகுன்றாது
ஞாலமிதையிவ்வாறு நல்லோர்பெரியோர்க்கும்
ஆதாரமின்றியென்ன வாபத்துவந்தாலும்
நீதிவழுவார்கள் நிறையுந்தவராரே
ஊரார்பொருள்மேலொருபோதுமாசைவையோர்
பூராயமான புருஷோத்தமநிகரும்
தன்னுடைய புருஷோத்தமநிகரும்
சின்னமொன்றுஞ்சொல்லாதார் தெய்வப்புருஷரென்பார்
சாந்தவரைக்காப்பார்கள் தன்புருஷன்மேருவாம்
ஏய்ந்தமனமறிந்து ஏவோர்புருஷரத்னம்
வாறுவறுமைமிக வந்தாலுமற்பர்களைப்
பாராரேசேரார் பண்பாம்புருஷசிங்கம்
தாய்தந்தையானாலுஞ் சமன்செய்தகோலதுபோல்
ஞாயமுரைப்போர்புருஷ நாயகமென்றேயுரைப்பார். சு௫

ஈகை.

ஆறுவற்றிலூற்றாறும் அண்டம்விளக்கிவருஞ்
சூரியனாருகுவந்து சூழ்ந்திடினும்வெய்யிலுண்டாம்

நல்லமதிதேய்ந்தாலும் நல்வெளிச்சங்கொஞ்சமுண்டு
கொல்லைபாழானாலுங் குருவிக்கிரையுமுண்டு
இவ்வகைபோலிவோருக் கேதிடர்கள்வந்தாலும்
எவ்வளவுமீவதல்லா லில்லையென்றுசொல்வாரும்
எடுக்கெடுக்கவூறு மிசைந்தமணற்கேணியைப்போல்
கொடுக்கக்கொடுக்கவல்ல கூடும்பெருஞ்செல்வம்
வந்தவிருந்துக்களித்து வரும்விருந்துபார்த்திருக்கும்
சிந்தையுடையோர்கள் தேவரினுமேயதிகம்
தாரித்திரத்தார் தயவில்லார்தம்மிடத்திற்
கூறினாலேதுங் கொடுக்காரிகழ்ச்சிசெய்வார்
ஈயுமுதாரனைத்தா னெப்போதும்வேணுமென்று
வாய்திறக்கவேண்டா மனதறிந்தேயீவானும்

ஈகைக்கிடையூறு.

தேனிடத்திலீயுமுண்டு சலத்தில்முதலையுண்டு
மானிலத்தின்வீடுகளி லண்டவிடாநாய்களுண்டு
சந்தனவிருட்சத்தி னடியிலேசர்ப்பமுண்டு
செந்தமிகுதாழம்பூ கிள்ளவென்றால்முள்ளுமுண்டு
கொடுக்குந்தியாகிகள்பால் கொடாமலிடையூறுசொல்லி
தடுக்குங்குலாமரங்கே தானுமுண்டேகண்டீரே. ௯௯௰
குற்றமுரைத்துக் கொடுப்போர்தமைக்கெடுப்பார்
சுற்றமழிந்திடையுஞ் சோறுகஞ்சாகிவிடும்

சிநேகம்.

மதியிலுருமுயலு மதிவளர்ந்தால்வளருஞ்
சதிருகத்தேயுநாள் தானுமதுதேய்ந்திடுமாம்
தாவிதனிற்கொடிகளும் மந்நீர்போற்றாழ்ந்துயரும்
மாவிதஞ்சேர்புற்பூடும் வளருமதிலேமடியும்
சேரும்பெரியோர் சிநேகமிவ்வாறாகுமென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்

சரீரசுகம்.

எற்றபுதன்சனியி லெண்ணெயிட்டேமுழுகி
காற்றுப்பனிவெய்யில் காயார்கள்மெய்வருந்தார்

ஓயாவழிநடக்கா ருண்டுபலகால்விரும்பார்
காயாவதுகிழங்கு கனியுமிகத்தின்னார்கள்

தன்வயதின்மேலான தையலுடனேசேரார்
உண்மைப்பசியன்றி யுணவுசற்றுமுண்ணார்கள்

மலநீரடக்கார்கள் மடப்பளியிலேயிருக்கார்
நலமாய்ப்பழங்கறியை நாடார்பலநாளும்

காய்ச்சுபால்நெய்மோரெக் காலமுந்தான்சேர்ப்பார்கள்
எச்சில்லாவழுக்கை யிளநீர்மிகுந்துண்பார்

ஆறுதிங்கட்கொருவிசைதா னவிரோசனமுன்
நாரியரைமாதமொன்றிற் கிரண்டுவிசைபுல்குவரும். சஎ

உண்டபின்புலாவி யுதகம்வருத்துவதும்
ரெண்டுபத்துரெண்டுமிந்த நெறிநிலையுள்ளார்தமக்கு

ஏர்க்குமுடல்தனிலே யெப்பிணியும்வாறாது
தீர்க்காயிசுண்டாகும் சேமமென்றுசெப்பினரே

மாறுபாடில்லாமல் வயிரறிந்துண்பவர்க்கு
நூறுவரையுடலி நோயணுகமாட்டாதே

நோயணுகல்.

கல்லால்மயிராலுங் கடுகிநடையாலும்
நெல்லாலுமியாலு நித்திரையில்லாதாலும்

ஒழியாவிசாரத்தா லுண்டபின்புழைக்கையினால்
கழியுமலசலங்கள் கக்கிஷமாய்வீழ்கையினால்

பின்னுவடக்குவதால் பெருத்தசுமைசுமத்தல்
மின்னாருடன்புணர்ச்சி மிகவும்விரும்புவதால்

வெய்யவனம்வேளையினால் வேர்வைபனிக்காற்றினால்
வெய்யவிளவெய்யில் விரும்பல்கனியுணர்வு

ஏர்க்குங்கிழங்குசரு கிலைவிரும்பிபுண்ணுவதால்
பார்க்குள்வியாதிவரும் பாதையிதுவென்றுரைப்பார்

காலையிடம்வெற்றிக் காய்வோர்பிணமதனின்
மேலேவரும்புகைதன் மேலேபடுவோர்கள்

தன்வயதுக்கேமூத்த தையல்தனைப்புணர்வோர்
தன்மையுடனிரவில் தயிர்வார்த்தேயுண்பவர்கள் சஅ

நால்வரிடந்தனிலே லட்சுமியநில்லாளாம்
மேலுமவராயுள் விழலாகப்போகுமென்றான்

இறந்துமிறவாதவர்.

பார்க்குள்விளங்கப் பலதர்மஞ்செய்தவர்கள்
மார்க்கமிகுகற்புடைய மாதைமணஞ்செய்தவர்கள்
தேவாலயமுதலாய்த் திருமடங்கள்கட்டினவர்
பூவானதுவிளங்கப் புனலாறுண்டாக்கினவர்
வாரியோரிருக்க மனைகட்டிவைத்தவர்கள்
தரையாண்டநீதிமன்னர் சற்புத்ரரைப்பயின்றோர்
காவியஞ்செய்கவிஞர் கவிமாலைசூட்டினவர்
பூவுலகிலோயாமல் பொருள்கொடுத்தமாந்தர்களும்
சீரானகோபுரங்கள் செய்துமுடித்தவர்கள்
சூராதிசூரர் துலங்குபதின்மூவர்களும்
வாகாயிருந்தாலும் வையகத்திலூழிமட்டுஞ்
சாகாதபேர்சொற்கத் தலமீதுறைபவராம்

இருந்து மிறந்தவர்.

நெடுகோள்மழிகன்மனை நீங்காதிருந்தவரும்
அடைவாமருமகன்று னம்மான்மனைதனிலே
சதமாயிருப்பவனும் தமிழறியாமூடருமே
இதமாய்க்கவிபாடி யிரக்கப்போம்வாணர்களும்
பொய்பேசிகடன்வாங்கிப் பிழைத்துதிரிபவரும்.
மாறுவறுமையுற்றோர் வல்லமருந்துசெய்தும்
தீராப்பிணியாளர் சிவகைசுமந்தேபிழைப்போர்
மனைவிதனைவணங்கி வயிறுவளர்ப்பவரும்
நினைவுதடுமாறிசற்றும் நீங்காக்கலைவுற்றோர்
சொற்சோர்வுபட்டோருஞ் சொந்தமில்லாப்பொருட்கு
மிச்சமாய்பேசி வீண்வழக்குசெய்பவரும்
மனைவிதனைக்கஞ்சி வந்தவிருந்துக்கொளிப்போர்
முனையானராசசபை மூடராய்ப்போனவரும்
ஈரேழுபேரு மெண்சாணுடல்படைத்தும்
சீர்கெட்டுயிரோடே செத்தபிணமாவார்கள்

சம்பத்துடன்பிணியில் நான்மெலிந்துவாழ்வதினும்
துன்பமற்றேயையமெடுத் துண்ணல்மிகவுநன்றும்

ஆனதிருமா தகன்றுவறுமைவந்தால்
ஞானம்போங்கல்வியும்போம் நாடும்பழித்திடுமாம்

தாய்பழுதுசொல்வாள் சபையேறவெட்கமுமாந்
தூயமனையாளுந் துரும்பாய்மதித்திடுவாள்

மெய்சொன்னார்பொய்யாகும் விசாரமும்போம்
உய்யவிருந்துவரி லுயிரோடேசெத்தபிணம்

மேண்மையறுவுகுலம் விந்தைநலமற்றுளதும்
போமேயிதற்கிசைந்து போவதுவேமெத்தநலம்

சேனைமருந்துசெய்யுந்தீராவியாதியுற்றால்
மாணிலத்திற்றனாக மாளுவதேயுத்தமமாம்

பொருளின் பலன்

பொருள்தேடதுக்கமதைப் போற்றிவைக்கத்துக்கமதாம்

பொருளைச்செலவழிக்கப் போம்போதுந்துக்கமதாம்
காகத்தின்கூட்டில் கருங்குயில்கள்முட்டையிட

மோகமுடன்காகமுந்தான் முட்டையென்றேயெண்ணுதல்போல்
ஈய்கள்தேன்கூட்டில் யெடுப்பாரிடங்கொடுத்து

போயலைகின்றதொரு புத்தியீனம்போலும்
சோரத்திற்பெற்றபிள்ளை சொந்தமென்றுமுத்தாடி

பேரிட்டழைக்கின்ற பேடிதனைப்போலும்
மயலாகத்தேடியே மண்ணிற்புதைத்தபொருள்

மயலார்பொருளுமல்ல வவன்பொருளுமல்லவென்பார்
உற்றபொருள்தேடமன முற்றுலகமுமே

நற்றுகஞானிக்கு நாடெல்லாந்தன்னுடைமை
பொன்னறியாமூடரிடம் பொருளதுவுஞ்சேர்ந்தாக்கால்

மன்னுங்குரங்குப்பூ மாலைபோல்கொண்டலைவார்
தேடுகின்றவல்லவர்க்குச் செம்பொன்னாருமசகம்

பொன்னாசையுள்ளவர்க்குப் போசனத்திலிச்சையில்லை
அன்னைசுற்றந்தர்ம மானதிலுமிச்சையில்லை

வெட்கமில்லைபோகலாம் வேளையின்னதென்றாமில்லை
இக்குணமுள்ளோர்பேய்க் கிணையாகுமென்றனரே

பொருள்வகை.

மெத்தவுந்தானேகுவித்து வீட்டில்வைத்தநெல்லதனை
நித்தமெடுக்கிலந்த நெல்லுமற்போவதுபோல்

ஏலநமக்கு மெழுத்தினளவாக்குஞ்
ஞாலமிசையிரவி நாழிகைபோல்நாளாகி

மாசவருடமென்று மாதத்துகையாகி
மோசமாய்க்கொல்லு முறைமையறியாமல்

இன்னநெடுநாளிருப்போ மிதுவேசதமென்று
பொன்னைமிகத்தேடிப் புதைத்துவைக்குமாந்தர்களை

ஸ்ரீதேவிபூதேவி சிரிப்பாளிவன்றேனீயாம்
மூதேவிசென்மமென்று மொழிந்தார்மனுநூலோர்

மிக்கதர்மம்பெருளா மின்பமென்றமூன்றினிலே
நற்குணத்தால்தேடுபொருள் நல்லபமுமின்பமுறும்

வஞ்சனையாய்த்தேடுபொருள் அத்தனையுமாகாது
மிஞ்சுபழிபகையா மென்பதனையுண்டாக்கும்

கூத்துபார்க்கவந்து கூடுஞ்சனம்போலும்
ஆற்றுக்கால்நீர்போ லைஸ்வரியங்கூடிவரும்

கூத்துமுடிந்தவுடன் கூடுஞ்சனங்கலைந்த
மாற்றம்போலாம்விடுமா மைஸ்வரியமுள்ளதெல்லாம்.   ௭௨௰

புண்ணியமெந்நாளும் புகழாகநிற்குமல்லால்
மண்ணினிலென்றைக்கும் வாழ்வுநிற்கமாட்டாது

நல்லறிவு கயவர்.

தன்னைப்புகழ்வோருந் தாய்தந்தையைப்பேணார்
அன்னைசுற்றம்விலக்கி யயலாற்குதவுபவர்

மேலோர்சொற்கேளாதோர் வேசைசதமென்றுரைப்போர்
பூலோகத்தொப்பனையைப் பொய்யென்றுரைப்பவருங்

கண்டாலுறவாடிக் காணாவிடஞ்சலிப்போர்
கொண்டபெண்டாள்செய்யுங் குறையைவெளிச்சொல்பவரும்

பொய்சாட்சிசொல்வோர் போற்றிவைத்துபிச்சைகொள்வோர்
நையல்சொற்கேட்பதுவுஞ் சபையில்பயனில்லா

வார்த்தையுரைப்பவரு மற்றுமிந்தபன்னிருவர்
பார்த்தால்மனுஷப் பதராம்பசாசிவரே

அக்கினியைக்கட்டலாமகலாநோய்தீர்த்திடலா
மிக்கதொருகஷ்ட மிருகமிணங்கிடலாம்

வல்லவிஷந்தீர்க்கலா மாண்டோர்க்குயிர்தரலாம்
வெல்லரியபேய்தனையு மிரட்டியேயோட்டிடலாம்

பறவைமிருகம்பேசப் படிக்கவுமேசெய்திடலாம்
வரப்போகவுஞ்செய்திடலாம் மறலியிடதூதரையும்

மணலைக்கயிறுக்கி வைக்கலாங்கயவர்களின்
குணமதனைத்திருப்பக் கூடாதுகண்டீரே. எநகூ

வெல்லமிதக்குவித்து வேம்பின்விதையைப்பதித்து
நல்லதொருபாலூற்றி நாளும்வளர்த்தாலும்

புல்லறிவு கயவர்.

சாதிகுணங்காட்டுந் தகைமைபோல்புல்லருக்கு
எதுரைத்துஞ்சற்குணங்க ளெள்ளளவும்வாராது

செல்வமதுவந்தவுடன் தெய்வந்தனைநினையார்
சொல்வரம்புசற்றுமில்லை சுற்றந்தனைநோக்கார்

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்கள்
கர்மியிவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாதே

உண்டென்றுநாளு முலகமுறைப்பதனை
திண்டிமிண்டாயில்லையென்று செப்புமவர்பேயெனலாம்

கோலெலும்புதின்னுநாய் சோறுநெய்யுமுண்டாக்கால்
சீலமுடன்வயற்றிற் செரியாதவாறதுபோம்

சண்டாளரானவர்க்குத் தர்மநூலானதனை
விண்டாலவர்செவியில் வீழாதொருநாளும்

புலிக்கஞ்சியோர்வேடன் போய்மறத்திலேயேன்
வலுக்குரங்குகண்டு வந்தவனையாதரிக்க

ஞானிக்கிசுகமுமில்லை நாட்டிலோர்சாதியில்லை
ஈனமிலேச்சர்களுக் கெப்போதுநிலையுமில்லை

காமிக்கொருவரம்பு கருத்துமுறையுமில்லை
மாமிக்கயோகிக்கு வஞ்சர்வினையரில்லை
சித்தசுத்தபூசைக்குத் தானுமங்கசுத்தியில்லை
வித்தைபுகல்வாணருக்கு வேற்றுமைகளாருமில்லை

புல்லறிவு.

கள்ளருக்குற்றாருமில்லை கபடருக்குஞானமில்லை
எள்ளளவும்துன்பங்க டேதுசுத்தவீரனுக்கு
பொய்யனுக்குசாட்சியில்லை புலையருக்கிரக்கமில்லை
ஐயோவிரோதிக்கு ஆபதொருநேயரில்லை

தான்பிடித்தபிடியாய்ச் சாதிப்பவன்குரங்கு
ஆனசபையிற்குறிப்பு அறியாதான்பட்டமரம்
எளியாருடனெதிர்ப்போ னேற்றதடிநாயாம்
பழிபாவத்துக்கஞ்சான் பசாசாகுமென்றிடலாம்
வந்தோர்முகம்பாரான் வனத்திலிருக்குங்காடி
பந்தமுறுசபையிற் படுப்போன்கிடாமாடு
அடுத்தோர்க்கிடர்விளைக்கு மவனேகொடுந்தேளாம்
பிடித்தபிடியைவிடப் புலவன்வலிசாறை
சுற்றெனினுங்கல்விகற்றுச் சபையிற்படிக்கரியான்
புத்தாம்விழுந்துபட்டுப் போனதொருகாட்டுமரம்
தன்புத்தியன்றிபிறர் சாற்றுபுத்திகேளாதான்
வன்புற்றுவானரமாம் வாய்பேசாவூமையென்பார்
அன்புவிளையாளு மரசர்பகையைப்பெற்றோர்
கொம்பிழந்தமந்தி கூகையுறவானபட்சி
கொட்டுந்தேள்போல்தீராக் கோபமுடையவன்றான்
குட்டியிட்டநாய்கரடி கொடியவனமிருகம்
மருங்காய்ப்பெரியோரை வந்தனைகள்செய்யாதான்
கருங்கல்லிலேயடித்துக் கைகால்வகுத்தசிலை

பண்டிதாள்பரிட்சை.

முக்கியஞ்சேர்நூலின் முறையுநிறையறிந்து
பக்குவமில்லாநாடிப் பரிட்சைதனையறிந்து

தேடியழைத்தபின்போய்த் தேகங்குணங்காலம்
பாடுகின்றநாடிகெட்டிப் பரீட்சைகளுந்தானறிந்து

சிந்தாதவாதபித்தச் சிலேற்பனத்தின்கூறறிந்து
வந்தபிணியும் வலுவுமிகத்தெரிந்து

கற்பங்கியாழங்கள் கனகுளிகைபற்பமுடன்
தக்கதொருசெந்தூரந் தயிலமுடன்சூரணமும்

இவ்வகையாய்லேகியமு மிதமறிந்துதான்கொடுத்து
அவ்வகையில்பத்தியமெத் தாகவேவையாமல்

எளிதானபத்தியத்தி லெப்பிணியுநீக்கிவித்து
தெளியானவாரோக்கிய ஸ்நானமிகச்செய்வித்து

தந்தமேதேபோதுமென்று தான்மகிழும்பண்டிதனை
சந்ததஞ்சேர்தேவர்பதி தன்மந்திரியெனலாம்

மிக்கப்பிணிவந்தால் வேணபொருள்தாரேனென்று
மிக்கநலதெய்வம்போல் மேன்மைமிகசெய்வார்கள்

உற்றபிணிதீருமென் றுறுதிசொன்னாலேகுருவாம்
சற்றேமருந்துசெய்யில் தந்தையென்றுசொல்வார்கள்

பாதிலகுவானால் பண்பிற்றமையனும்
பாதியுந்தீர்ந்துவிட்டாற் பரிசாசமைத்துனனும்

ஏதுபொருளானாலு மீவதுமுன்னேயனும்
காதலுடமற்றநாள் கடனாளியாவானே

அப்பாற்பகையாளி யாவர்கள்பண்டிதர்கள்
இப்படிசெய்லோப ரிருப்பாருலகினிலே

தீருதநோயருமை செப்பாதபொய்யரிடம்
வேரானபண்டிதரை மேல்மருந்துகேட்பவர்கள்

மூர்க்கரிடத்தினிலு மொய்குழலாய்பிரியா
நேர்க்குமவரிடத்தி லோபியர்கள்தம்மிடத்தில்

கததுரோகியர்கள் கண்டதெல்லாமுண்போர்கள்
பத்தியத்தைதாழ்வுசெய்யும் பண்பில்லாமாந்தருந்தான்

மட்டில்லாப்பொன்னையள்ளி மாரியெனயீந்தாலும்
கட்டியடிவைப்ப தியல்பல்லபண்டிதற்கே

சுத்தம்.

வெண்ணீறுடன் துளசி வில்வமருச்சுகந்தம்
பண்ணும்புதுப்பாண்டம் பழவர்க்கங்காயிலைகள்
செந்நெல்கவசமுடன் செம்பிரும்புவெண்கலங்கள்
பொன்னுடன்வெள்ளிமுதல் பூணுநவமணிகள்
கோதில்லாவேணபட்டு கோடித்துகில்யாவும்
பாதரட்சையாவதுடன் பத்தென்பதிவ்வகைகள்
கீழோர்பானுற்றிடினுங் கீழோர்களீந்தாலும்
தாழ்வில்லாமேலவர்கள் தானிதனையேற்றிடலாம்
ஆசையிஞ்சமன்னுரதாபானத்திற்கும்
பேசரியாப்பாலர்கள் போந்தசிறுநீரதற்கும்
வேட்டையிலேநாய்கடித்து விட்டிட்டமாமிசமும்
தேட்டமுடன்பட்சிகள்தான் தின்றபழங்களுக்கும். ௭௯௰
இந்தவகைநாலுக்கு மெச்சிலிலையென்றுசொல்லி
முந்தமனுநூலின் முறைமையுரைத்தனரே
எத்தொழிலுமெக்கலமும் மிழிவுண்டேயல்லாது
சுத்தமதுவென்றவருஞ் சொல்லுதற்குநாவுளதோ

ஆகாமை.

மன்னர்பகையு மாதவத்தோர்தன்பகையும்
வின்னக்கொலைஞர் விகடப்ரசங்கிபகை
ஊரார்பகையு மூற்றாருடன்பகையும்
வீரானமந்த்ரிபகை மிகுந்தபணக்காரர்பகை
வல்லர்கணக்கர்கவி வாணர்குருபகையும்
வல்லமைசேர்பண்டிதர்கள் மந்திரிவாதிபகை
பெற்றபிள்ளைபெண்சாதி பின்னவர்கள்முன்னவர்கள்
உற்றபதினேழி லொருபகையுமாகாதே
ஆறடுத்தவூறதுவு மாசரிடஞ்சேவகமும்
நீரில்விளையாட்டும் நீர்மிகுந்தபேராறும்
தாசியுறவுபிறர் தாரமின்னார்நேசமதும்
நேசமில்லாத்தாயாதி நேசமாகாதுற்சனர்கள்

தன்னோடிணங்குவதுஞ் சத்ராதிநட்பதுவும்
பன்னகத்தையாட்டுவதும் பகடுநடத்துவதும்
மெய்விளங்கும்போதினிலே மின்னாருடன்புணர்ச்சி
மையிருளிலேதனித்து வழிபோகும்வல்லமையும்
நஞ்சுடனே நீமருந்தால் நாளும்பழகுவதும்
அஞ்சாமலெப்போது மலகைகளையோட்டுவதும்
ஆர்க்குங்கடலோட மதிலேதான்சஞ்சரித்தால்
பார்க்குமதுவுண்ணல் பலநாள்களவுசெய்தால்
இத்தகையாய்ச்சொன்ன திருப்பதையுமேமனதி
லுற்றாலிடறு முயிர்க்குலயமாமிதுவே

சாரார்பயிரிடுவோ ரில்லாளிரண்டுடையோர்
ஊரார்போம்பாதையந்த யோரம்பயிரிடுவோர்
பிணைப்பட்டுப்பொய்சாட்சி பேசுமிவர்நால்வர்கள்
கணைகெட்டபேரிவர்கள் துன்பத்திற்குள்ளாவார்
சிற்றூர்குடியிருப்போர் சீர்கெட்டபெண்டுடையோர்
பெற்றபிள்ளையிற்றிராளாய்ப் பெண்ணைப்பெற்றவரும்
அற்பனைச்சேவிப்பரு மலக்கழிந்துபோவதல்லார்
சொற்பச்சிலநாளில் தொந்தரைக்குள்ளாவார்கள்

அத்திக்காய்கோவக்கா யைவிரலிதேற்றாங்காய்
சுத்தவெள்ளைக்கத்திரிக்காய் சோற்றுக்காந்தலிவைகள்
தின்பார்வொருநாளுந் தேவபக்தியில்லையென்று
முன்பாகநூலோர் மொழிந்தார்மனுநூலில்

துறந்தோரடங்காதார் துன்னிபிணியோர்களையும்
புறம்பேசும்வஞ்சகர்கள் பின்னவர்கள்பெண்டுகளும்
கல்லாலவன்நெஞ்சிற் காணுமிவரெண்மறையும்
நல்லசபையிலொரு நாளும்வைத்துப்பேசவொண்ணா

ஆசனங்கள்தான்போடி லாயிசிதுவிர்த்தியில்லை
போசனமுந்தான்சமைத்தால் போமேஅயிஸ்வரியும்
தனக்கெண்ணைதான்தேய்த்தார் சந்ததிகட்காகாது
அனர்த்தமிதுமூன்றென் றருளினார்முன்னோர்கள்

யோகியொருபோதே யுண்பானிருபோது
போகியுண்பான்மூன்றுபோ துண்பான்வியாதியஸ்தன்

உடனொருநான்குபோ துண்ணுமவன்றனக்கு
இடையூறுண்டாகுமென் றியம்பினர்முன்னோர்கள்
வீரத்திலொப்பில்லா விக்ரமனேயானாலும்
வீரியமும்வாறும் விளம்பிடவுமாகாது
வேந்தர்குருபொய்யர் மேன்மையுள்ளோர்கோபிகட்கும்
வாய்ந்தகடன்கொடுத்து வாங்குவதுநீதியல்ல
நாட்டுக்காகாதவரை நமக்கடங்காப்பெண்டீரை
மீட்டுமந்தராசனுக்கு மேலானமந்திரியை
துற்சனர்சினேகமதை தொட்டாலசையும்பல்லை
இட்சணமேயைந்து மெடுத்துவிடவேணுமென்பார்
கடன்பட்டுத்தரித்தோர் கைசீட்டிலேசேஷம்
விடந்தீண்டிமீண்டதிலே யெவ்வளவுமேசேஷம்
அக்கினியில்வெந்த அகந்தனிலேசேஷம்
மிக்கானசத்துருவை வெல்லுவதிலேசேஷம்
தெய்வப்பிரார்த்தனைகள் செய்துமதில்சேஷம்
உயயபிணிமருந் துண்டதிலேபின்சேஷம்
வாணிபோய்மீண்டதிலே கடுகளவுசேஷமுடன்
ஆணியாம்பத்து மனுவும்வைக்கலாகாது

பலனில்லாமை.

சந்திரனில்லாவானஞ் சற்சனரில்லாதவூர்
மந்திரியில்லாவாசல் மதகரியில்லாவெம்போர்
மக்களில்லாச்செல்வ மதுரமில்லாதகவி
தக்கதினபதிகள் தானில்லாவெஞ்சேனை
பெண்ணுரில்லாதமனை பிறவியில்லாதவுடன்
விண்ணுனைப்பாடல் வினையமில்லாவேசி
கோப்பில்லாக்கூத்துடனே கொங்கையில்லாபெண்ணழகும்
தாப்பில்லாச்சீவனங்கள் தந்திகளில்லாவீணை
பத்தியில்லாப்பூசை பார்த்திபரில்லாதபுரம்
சத்தியமில்லாதவாய் தானறியவாணிபங்கள்
சந்தமில்லான்பாட லுதாரணஞ்சொல்லாதகவி
நந்தாப்புனல்சேர் நதிவளமில்லாநாடு

தேசிகனில்லாதவித்தை தியானமதில்லாதீட்சை
பேசரியநல்லறிஞர் பெரியோரிலாதசபை
குடிதலமில்லாநாடு குணமிலாப்பெண்ணாசை
வடிவுற்றுவாசமில்லா வாணமிருமலரும்
சேகரமில்லாக்கதை தீபமில்லாதமனை
சூகரம்போலுண்ணுகின்ற சுசியில்லாப்போசனமும்
கல்வியில்லாத்தேகங் கற்பனையில்லாதகவி
வல்லவிவ்வெண்ணான்கில் வரும்பயன்களொன்றுமில்லை
தந்ததேபோதுமென்று தான்வாங்காவேதியனும்
வந்ததேபோதுமென்று வாங்குகின்றராசாவும்
வெட்கத்துக்கஞ்சுகின்ற வேசையரும்வெட்கமில்லை
மிக்ககுலப்பெண்டீர் மேன்மையில்லைகஷ்டம்வரும்
அன்னையிறந்தாலுண வாணதெலாம்நட்டமாம்
பின்னைப்பிதாவிறந்தால் போனவித்தைநட்டம்
உற்றதுணையிறந்தா லுடலிலேபாதிநட்டம்
மற்றுமனையாளிருந்தா லன்றுதலைபோனதென்பார்
பருவம்போய்ப்பாபம் பண்ணுவிக்கும்வித்தைகளும்
பெரியகிழவனுக்கு பெண்டிளமைப்பெண்ணாளும்
அத்ததரித்திரருக் கழகுடையபெண்டீரும்
இத்தன்மைமூன்றினு மெய்தும்பலனிலையே
வாரியிலேபெய்ந்தமழை வயிறுபசியில்லாத
பேர்களுக்குப்போடுஞ்சோர் பிசாசுக்கிடும்பூசை
பொன்னுள்ளோர்க்கீய்ந்தபொருள் போதவிந்தான்கினிலும்
என்னபலனுமில்லை என்றனரேமுந்நூலோர்
அந்தணர்க்குமாவார்க்கும் ஆபத்திலேயுதவார்
இந்தவுலகி லிருந்தென்னிறந்துமென்ன
யார்க்குமுறையாதவித்தை யனேகவிதமாகிப்
பார்க்குள்படித்தென்ன படியாதிருந்துமென்ன
அன்னகறிசுவைக ளினிதாயிருந்தாலும்
பின்னுமதில்நெய்யில்லாப் போசனமுந்திருப்தியல்ல
தன்னால்நிருவகிக்கத் தகாதவிரதமுற்றால்
என்னபலனுமில்லை யிடறுவருமுத்தியல்ல

தருணமறிந்துதவாத் தன்மைசேர்நண்பாளர்
அருமையாய்ப்பின்னு னுதவியுதவாமலென்ன
வாலிபத்திலெய்தாத வடிவுடையபெண்ணுளும்
சாலவிர்த்தாப்பியத்திற் சார்ந்ததென்னநீங்கிலென்ன

புருஷனில்லாவிதவை பொன்னுடையாபரணம்
வரிசையுடனணிந்தால் வையகத்தோரேசுவார்

பெற்றதாயில்லாத பிள்ளைதனையெவ்வாறு
வைத்துவளர்த்தாலும் வளங்கொடுக்கமாட்டாது

பல்லில்லாதோறுமற்றப் பசியுள்ளோரானவரும்
நல்லருசிகாணுரென்று நவின்றூர்மனுநூலோர். ௮௫௰

தெய்வதவங்குருமுறையுந் திருஞானசாஸ்திரமும்
வையகத்திலேமருந்து மந்திரமோடிவ்வைந்தும்

மெய்யென்றுரைப்பவர்க்கு மெய்யாய்விளங்கிநிற்கும்
பொய்யென்றுரைத்தாக்காற் பொய்யாகிப்போய்விடுமே

பாடுபடாமற் பலன்கொடுக்குநற்பனைபோல்
காடிக்கொடுப்பதுவே நன்றாகுமுத்தமமாம்
சிலதுநாள்பாடுபட்டால் தென்னைமரம்பின்பு
பலந்தருதல்போல்கொடுக்கும் பண்பதுவேமத்திமமாம்
வருடமெலாம்பாடுபட்டால் வாழைபொருவிசைதான்
தருமபலன்போல்கொடுக்குந் தர்மமுமேயதர்மமுமாம்

தெண்டனையில்லாவேலை சேயரில்லாமனைவி
கொண்டவர்க்குளடங்காக் கொம்பனையாளில்வாழ்க்கை
வண்டரிணக்கம் வறுமைதனிற்சேர்க்கும்
மண்டலத்திலிவ்வைந்தும் வளந்தரவுமாட்டாதே
மாரிகாணுதபயிர் மக்களில்லாயில்வாழ்க்கை
ஏரிகுளமில்லாவூ ரிரவிகாணுவசனம்
அன்னைகாணுதபிள்ளை ஆவினைக்காணுதகன்று
பொன்னில்லாப்பூஷணங்கள் போசனமுண்ணுதவுடல்
காவுகாணுதவண்டு கலைகள்காணுக்குமரன்
மேவுகொழுநனில்லா மெல்லியர்களானவரும்
தோழர்காணுநேசர் சோடுகாணுப்பேடு
மீருமதிகாணுத வெண்குமுதமானதுவும்

ROJA MUTHIAH
KOTTAIYUR-[illegible]
TAMILNADU - INDIA

பெரியோரில்லாதசபை பெண்கள்தனில்மூத்தாள்
உரியதியாகியில்லா வூர்பதினேழாமிவைகள்

தாழ்வுதருமல்லாது சாந்தவளமாகாது
வாழ்வுகாணுவிளமை வாருகுமென்றிடுவார்

நல்லோர்க்குச்செய்தநன்றி நாட்டிவைத்தகையெழுத்தாம்
பொல்லார்க்குச்செய்தநன்றி பொய்கையுறும்நீரெழுத்தாம்

சுற்றமுண்ணாவிவ்வாழ்வுஞ் சுதியில்லான்பாடுவதும்
கற்றறியான்பாடுகவி கைப்பெண்ணிலேயழகும்

துற்குணப்பெண்சாதி சொற்கேளாதவடிமை
மிக்கவிமையாறும் வீணும்பலனிலையே

ஊமைசெவிடருக் குரைத்தவுபதேசம்
சேமமென்றுபாவிகட்குச் செய்தவுபகாரம்

மேலுமுவர்நிலத்தில் விதைத்தொருநல்விதையும்
சாலயிவைமூன்றுற்றுத் தண்ணீரிற்கரைத்தபுளி

குதிரைக்கிருவுத்தன் கூறுதவிப்புலவன்
சதிரானவாயுதங்கள் தனக்குச்சிலம்பியுமாம்

வேசைக்குநட்டுவனும் விளங்குபலராகமதற்
காசையாய்ப்பாடுவனு மைவருந்தானில்லாவிட்டால்

ஏத்தமுடன்மதிலி லெழுதிவைத்தபெண்ணழகைப்
பார்த்துமகிழ்ந்துபோம் பண்பாம்பலனிலையே

தேவாலயஞ்சுற்றித் திரும்பாததாள்தாளோ
தேவதரிசனங்கள் செய்யாதகண்கள்கண்ணே. ஆஎம

பகவான்தியானமதைப் பண்ணுதசிந்தையென்ன
ஜெகமீதுபகவானைச் சேவியாச்செங்கையென்ன

சிவன்மாலையுந்திதிகள் செய்யாதவாயென்ன
சிவன்மாலையும்வணங்கச் சென்னியுமேசென்னியதோ

தினமுப்புராணகதை கேளாததென்னசெவி
முன்னயானபுண்யநதி மூழ்காததென்னவுடல்

மேவுமிவையெட்டு மில்லாதேன்பாழ்செனனம்
பாவியிவனிருந்தும் பலனில்லைவீண்பிறப்பாம்

ஞானமறிதல்கொடை யாளிதனவானாய்
ஆனதொருபூவலஞ்செய் வானாகிவிவேகியுமாய்
மிக்கதொருவித்துவான் விளங்கின்றகீர்த்திவான்
உக்ராணவீர னுபகாரியாவருக்கும்
இவ்வகையிலோர்பே ரெடுக்காதசென்மமவன்
இவ்வுலகிலேமனித னென்றவனைச்சொல்லவொண்ணா
சீர்படைத்தவோர்மனுஷச் சென்மமொருயோசனைக்குள்
பேரெடுக்காப்பேர்மனுஷப் பிறப்பிற்கழுதையுமாம்

லோபத்தனம்.

தேன்றுளியொன்றாற்கடலைத் தித்திக்கச்செய்தாலு
மேன்மையுடன்மலையை மெழுகாகச்செய்வாலும்
பூவினால்வச்சிரத்தைப் போர்த்துதுளைத்தாலும்
மேவுங்கபடருக்கு மெய்ஞ்ஞானம்வந்தாலும்
ஊமைபடித்திடினு மூர்க்கமிலாப்பேடிக்கு
தாமோதரன்வீர்ய தைரியமுண்டாயிடினும்
சித்தங்கயவருக்கு நீதிமுறைவந்தாலும்
இத்தலத்திலோபர்களுக் கீகைசற்றும்வாராதே
தின்னாலுண்ணமற் றேடிமிகச்சேர்த்து
புண்ணியமுஞ்செய்யாமற் புதைத்துவைக்குமுலுத்தர்பொருள்
தெண்டம்பெரும்பிடிக்கும் தீர்க்குந்திருடருக்கும்
வண்டமனவேசைகட்கும் வலுவந்தகாரருக்கும்
இதமில்லாப்பேடிகட்கு மெல்லாப்பிசாசுகட்கும்
உதவுமோயா வுலுத்தர்பொருளதுகாண்
ஆகாயதாமரையி னரியவிபூதியைவிளக்கும்
வாகாப்பழுஞ்சுவரு மாடுறைஞ்சுமுள்மறமாம்
மாடுகடாவதுவும் வையகத்திலேயுழவாம்
கூடப்பொதிசுமக்குங் கூடிவருமேயதனால்
செத்தபிணமானாலுஞ் சிறிதுஉபகாரமுண்டு
புற்றதுவுமண்ணாகும் பொங்கரவுக்கேமனையால்
கல்லாலேயாலயங்கள் கனத்தபணியுண்டு
ஆல்லற்கழுதைபென்று லழுக்குப்பொதிசுமக்கும்

வாறுகோணுது மாளிகையெலாம்விளக்கும்
பேருய்க்குரங்கு பிடித்தார்க்குதவிசெய்யும்

ஈயாதலோபிகளா லெவர்க்குமுபகாரம்
வாயாதவர்கொடுக்க மாட்டாரொருநாளும்

நெல்லின்புதரென்ன நீரினிலேபாசியென்ன
நல்லமரத்தில்மொக்கு நன்றுயிருந்துமென்ன

சீதேவியாருடனே சீர்கேடியானதொரு
மூதேவிதான்பிறந்து முக்கியமுண்டோவதனால்

தயவாயொருவயற்றில் சார்ந்தவிவேகியுடன்
கயவர்பிறந்துமென்ன காரியமெல்லாஞ்சிதையும்

உச்சிதமாயார்க்கு முதவில்லாதார்வாழ்க்கை
நச்சுமரம்பழுத்து நடுவூரில்நிற்பதொக்கும்

செத்தபிணமதனைச் சிங்காரித்தாவதென்ன
கைத்தலத்திஞலிழுத்து காட்டிலேபோட்டுமென்ன

நாயானதுகொழுத்தால் நாட்டிலதையார்புசிப்பார்
ஈயாதலோபியற்கு எல்லாமிருந்துமென்ன

ஈயாதயில்மந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையால்மிருக மதனிலேசேர்க்கவென்றார்

இகழ்ச்சியினம்.

கற்பனையில்லாத கவிதனையேகேட்பதுவும்
விற்பனமில்லாரிடத்தில் வேண்டுங்கொடைபலவும்

ஆதரவில்லாதபெண்டீ ரருமையில்சேவகமும்
பேதமின்றிப்பேர்விளங்காப் பிள்ளைதனைபெற்றதுவும்

ஊழிவினையு முதிர்கொடுமையல்லாமல்
வாழ்வல்லவிரைந்தும் வகையாகுங்கண்டீரே

நீர்நுழையாவிடத்தில் நெய்நுழையும்நெய்நுழைபாய்ச்
சார்பிலேபால்நுழையுந் தானதுபோகாவிடத்தில்

மீறிப்புகைநுழையும் வெம்புகைபோகாவிடத்தில்
தாரித்திரனுமது தன்னில்நுழைவானும்

தக்கதராதரங்கள் தானறியாப்பேரிடத்தில்
மிக்கவிருந்துண்பதிலு மோடெடுத்திரத்தல்நன்று

தூயவறிவில்லாச் சுதரைப்பெருவதிலும்
பேயதனைப்பிள்ளையாய்ப் பெற்றுவளர்த்தல்நன்று
உள்ளன்பில்லார்களுடனட்புகொள்வதிலும்
கள்ளுண்ணும்வம்பர் கழுதைகளைமேய்த்தல்நன்று

வெளியிடக்கூடாதவை.

ஆசானுபதேச மரிவையர்கள்புணர்ச்சி
மாசானசோரம் மனதடக்கமுற்றபொருள்
மானம்பிறர்மான மறந்துடனேதான்கொடுத்தல்
தானுமகத்திருக்குந் தானத்தினுல்விளையும்
இல்லாத்தின்சேவலர்கள் யாவரிடமீதுபத்துஞ்
சொல்லவொண்ணுதீனமென்று சொன்னுர்மநுநூலோர்
தன்னகத்தாளன்றுமறு தாரமேலாசையுற்றால்
பின்னொருவர்தாரமது பெண்டீரைச்சேராரோ. கூ௰
பனறயன்பறையநல்ல பகர்ந்தமொழிதப்பிதமாய்
யறைவோன்பறையனென்று பகர்ந்தாரேமுந்நூலோர்
ஞானமுற்றசற்குண நாளுமில்லான்கற்றகல்வி
ஈனப்பறையர்வீட்டி லிருக்குங்கங்காசலமாம்
தண்ணீர்நன்மை தாரையுவற்றினுலழியும்
பெண்மேணர்கள்நன்மை பிறர்கமலத்தாலழியும்
கோதில்லாமாதவசு கோபத்தினுலழியும்
வேதகுலநன்மை விபசாரத்தாலழியும்
மன்னவர்கள்நன்மை மனுநீதியாலழியும்
இங்கிலத்திலுத்தமர்கள் யாவர்களுஞ்செய்தநன்றி
பொல்லாததன்னகத்துக்குப் பெண்ணுலழியுமென்று
எல்லோர்கள்முன்னுல் மனுநூலுரைத்தனரே
பருவதமும்பார்க்கடலும் பார்வதியும்லட்சமியும்
அரிதாய்ப்பறந்திடத்தி லரியானும்வாழ்வதுபோல்
பூமியிலேதங்கள்மனைப் பெண்ணுள்பிறந்தவிட
மாமியார்வீடே வளமென்றுரைப்பார்கள்

கேடு.

காவலர்கள்யானை கெடுப்பதுவுமேயடங்கா
நாமமிகுகோபமுட னமதுரைகேளாவடிமை

ஆதாயமின்றி யதிகச்செலவுகளும்
காதாரக்கேளாச்சொல் கவியில்மிச்சங்கண்டெழுந்தும்
சாட்சியின்சும்வழக்குந் தயிரியமிஞ்சுங்கலே
பேச்சில்சரசமிஞ்சிப் பேசுபரிகாசமுமாம்
பத்தாவின்சொற்கடங்காப் பாவைதனைப்பெண்டாக
வைத்தான்வடுந்துக்க மதனைவிடதுன்பமுமாம்
ஓரவிகாரமா யுயர்ந்தோற்குச்சொன்னவர்கள்
ஊரழியுமேசுமக்க உலகமதுநடுங்கும்
உப்பிட்டபாண்டமிலே யுதிர்ந்தமரம்போலாம்
ஒப்பில்லாவாழ்வும்போ மூற்றூர்பெற்றூர்பாழாம்
மாதேவியான மலர்மாதகன்றிடுவாள்
மூதேவிசேர்வள் முடிவில்நரகமெய்தும்
என்னேரஞ்சண்டையு மட்டில்லாச்சிரிப்பதுவும்
சின்னஞ்சிரியாரிணக்கந் தீராக்கொடுங்கோபம்
வேசையுறவும் விவேகரில்லாரிடத்தில்
ஆசராய்ச்சேவகங்க ளாறுமிவைகேடெய்தும்
தேடாப்பொருளழித்தல் தீராதகோபம்ரண்டும்
கேடாய்முடியுமல்லால் கீர்த்திசற்றும்வாராதே
ஞானந்தனங்கல்வி நாடிவருங்கால
மானோர்மேலாசைதரும் வாழ்வும்போந்துக்கமுமாம்
என்னன்றியைமறந்தார்க் கெவ்வாறுமுடிவுண்டாம்
மனமறிந்துசெய்நன்றி மறந்தார்க்கீடேற்றமில்லை.
இமிசைபட்டாற்று தேழையழுதகண்ணீர்
வமிசத்தைதேய்க்கு மரமுங்கூர்வாளெனலாம்
தீங்கானவாங்காரஞ் செல்லுமிடமானதன்றித்
தாங்காவிடஞ்செறுத்தல் தப்பாமற்கேடுவரும்
தாழ்ந்தாருயர்ந்தார் சரியாமெனவறிவால்
ஆய்ந்துமறியாதைசெய்யா தாராகிற்கேடுவரும்
சரியானபேரையன்றித் தன்னிலதிகபலக
பெரியோருடனெதிர்த்தாற் பிராணபயமுண்டாகும்
இத்தலத்தில்யாரொருவர்க் கெந்நாளுமுறபாதம்
புத்தப்பிரதானமாய் பொல்லாங்குசெய்வார்கள்

புத்திரர்களில்லாமற் போவதுவுமல்லாமல்
அர்த்ததரித்திரர் யற்பாயுசாவார்கள்

ஏற்கையுடனிவரு மேதேதுகாரியமுந்
தீர்க்கவிசாரணைகள் செய்யாரேயாமாகில்

பின்னாலேதுன்பம் பிணக்குமிகவுண்டாகும்
அந்நாளேகீரியினூலைக்துகுடிகெட்டதொக்கும்

சத்ராதிசொல்லைத் தாந்தாய்நினைப்பவரும்
உற்றமனையாட்டிக் குணமையுரைப்பவரும்

கொடுத்தகடன்கேட்டாற் கோபங்கொளுற்றவரும்
எடுப்பாய்பெரியோரை யெண்ணுமற்பேசினவர் ௯௪௰

பெரியதனம்வந்தவுடன் பின்முன்னும்பாராமல்
இருவிழியாற்சற்று மேரிட்டுபாராதார்

இனியபரிதானத்தி லிச்சைவைத்தேயொருவர்க்
கனியயாஞ்செய்துபொல்லா வவதிவரச்செய்தவர்கள்

பாரிதனைவிட்டுப் பரத்தைமேலாசைவைத்த
பேரொழுவருங்கடவர் பேய்நாய்பிறப்பாகும்

கூடிப்பிரிவதனால் கொடியசூதாடுகையாற்
கேடுவருமிதற்குக் கெணிதமில்லையென்றனரே

கண்ணினாற்காண்பதுவுங் காதினாற்கேட்பதுவும்
திண்ணைமுடன்முன்பின்னாய்ச் செப்பினோர்கேடுவரும்

வித்தமகன்மைஸ்வரிய மேதுங்கிளைகூட்ட
மற்றும்பயருழிய னுலுமகிழ்ச்சியினால்

ஏர்க்குமெளியோர்கள்முதல் யாவரையுந்தூஷணித்தல்
தீர்க்கமிதுகேடுவருந் திண்ணவனூர்வள்ளுவனூர்

கெஞ்சிற்பயமதுதா னேரிடயாவரையும்
அஞ்சவஞ்சச்செய்தா லவர்கட்குகேடுவரும்

தினையளவுகன்றிமுன்னஞ் செய்தாரேயாமாகில்
அணிப்போதிலுமறக்க லாகாதுதான்மறந்தால்

அந்தணர்க்குங்கோவுகட்கு மடாதுபொல்லாங்குசெய்தால்
இந்தனையும்வந்தவர்க்கு நேரிடுமென்றேயுரைத்தார் ௯௫௰

ஆவலுடன்தன்பிழைப்புக் காகாவொருவருக்குத்
தீவினைகளெவ்வளவுஞ் செய்வாரேயாமாகில்

நீண்டதொருதன்னிழல்தா னின்றடியிலாவதுபோல்
ஆண்டுநூறுனு மவரைவிட்டுப்போகாது
முன்னிலதிக மிடிமையது வுண்டாகும்
பின்னாலேழேழ் பிறப்பும்விட்டுப்போகாது
செய்ததொருதீவினைதான் செய்தார்க்கெப்போது
மெய்துமென் றுசொல்லி விளம்பினார்வள்ளுவரும்

அரிது.

அரிதரிதுமானிடர்க ளாகப்பிறப்பதுதான்
உரியதொருகூன்குருடு ஊமைசெவிடுபேடும்
நீக்கிப்பிறக்கரிது நேராய்ப்பிறந்தாலும்
தீர்க்கமுற்றஞானஞ் சிறந்தகல்விநற்குணங்கள்
வாராதரிதரிது வந்தாலுந்தானதர்மம்
நோத்தரித்தரிது நெஞ்சிற்றரித்தாக்கால்
நீணிலத்திற்குன்றமல் நெடுநாளும்வாழ்வுபெற்று
வானவர்கோன்றன்பதமும் வருமென்றுரைத்தனரே

இனிது.

இனிதினிதுவேதாந்தமினிதினிதாமன்பருள்ளம்
இனிதினிகாணுக்கண் ணோனுங்கேளாச்செவியே

கொடிது.

கொடிதுகொடிதென்பதுதான் குவலத்திலேவறுமை
இடருமதிற்கொடிது இளமைதனிலேவருமை ௯௬௰
அதிற்கொடியதாமருந்தி லகலாதவெவ்வியநோய்
அதினிற்பெருங்கொடிது அன்பில்லாத்தம்பியுமாம்
அதனில்மகாகொடிது அடங்காதபெண்சாதி
அதினிற்கொடிதுண்ட வினோடுறங்குவதே

பெரிது.

பெரிதுபெரிதிந்தப் பேருலகுநான்முகன்றன்
வரியப்படைப்பா மவன்மால்வயிற்றுதித்தோன்

மாலோகடல்துயின்றான் வாரிகுருமுனிவன்
பாலொடுக்கமாமுனிவன் பண்டொடுக்கங்கும்பமதில்

கும்பமேபூமியதிற் குள்ளாம்பொடிமண்ணும்
தம்பமொருபூமியாந் தலைப்பாரஞ்சேடனுக்கு

சேடனுமையாள் சிறுவிரலினுழியாம்
ஈடில்லாதவுமையா ளிறையவர்க்குள்ளொடுக்கம்

தொண்டரியத் தொடுக்கமிறைவன்றான்
தொண்டர்பெருதனைச் சொல்லமுடியாததுவாம்

முக்கியமுள்ளது.

தலத்தினிற்சிதம்பரமாந் தாருவினிற்சந்தானம்
பிலத்திலேமாருதமாம் பிரணவமாமந்திரத்தில்

வேதத்தில்சாமம் விரதமேகாதசியாம்
மாதத்தில்மார்கழியா மலைதனிலேமாமேரு

நிலத்திலேகாஸ்மீரம் ரிஷிகளிலேவதிஷ்டர்
குலத்தில்மறையோராங் குதிரையிலுச்சிரவணம்

வாரத்திலாதித்த வாரமந்தகான்மீனில்
பேருற்றவாதிரையாம் பெருமுனியும்நாரதனும்

தனத்திற்குபேரன் தானமேதானமுமாம்
மனுக்களிலேராசாக்கள் வாரியிலேபார்க்கடலாம்

மேகத்திற்புட்கரமாம் விலங்குகளிற்சிங்கமுமாம்
யாகத்தனிற்சிரேஷ்ட மச்சுவமேதமென்பார்

மாமணியில்மாணிக்க மலரிலேபத்மமலர்
காமதேனுப்பசுவில் கங்கைநதியாம்நதியில்

தமிழிலகத்தியராந் தந்தியிலைராவதமாந்
தமனியமாம்லோகத்தில் தானியத்திற்செந்நெல்லாம்

பட்சிகளிலேயுவணம் பாம்பிலேவாசுகியாம்
மச்சத்திலேமகரம் வடிதனிலேரதியாம்

கற்பிலருந்ததியாங் கபிலராஞ்சித்தர்களில்
செப்புகின்றவாக்கில் ஸ்ரீராமச்சந்திரனும்

அசுரர்குலத்திற்பிரக லாதனனேயுத்தமனும்
வசியமுறுபடையில் வச்சிராயுதமாகும்

சங்கீதத்திபாஞ்சசன்யஞ் சந்திரனுங்கிரகத்தில்
சங்கும்பதவிலே சாயுச்சியமாகும்
போகத்திலிந்திரனும் புஷ்பகமவர்மனத்தில்
வாகொத்தவில்திறத்தின் வாழ்விலேமைந்தர்களாம்
உடையிலேபட்டாடை யுத்தியிலேயூகிமந்திரி
கொடையிலேதானகர்னன் குணமூன்றில்சாத்மீகம்
மன்னும்புராணத்தில் மாபாரதமாகும்
துன்னுஞ்சுடரொளியில் சூரியனேமேலொளியாம்
ஆடுமீனிராறி லதகந்துலாமாகும்
வாடாதநுண்ணியநூல் வள்ளுவனார்சொற்குறளாம்
சுவையாரிலேலவணந் துணைவரிலிலக்குமணன்
சிவமணியிலட்க்குவடந் தேசத்தில்சோழதேசம்
பொறுமையிலேபூதேவி போரிலேராவணனும்
திருமாலாம்ராகவனுஞ் செய்தபோரேயதிகம்
ஓசையிலிடியேறு ஊரிறயோத்தியதாம்
ராசரிலேசாதி ராஜனும்விக்கிரமன்
அன்பாகச்சொன்னவிந்த வறுபத்துநான்குபேர்
முன்பாமுதன்மையென்று முன்னோர்மொழிந்தனரே

கொடுமையாலழிதல்.

தக்கவிரணியனுஞ் சக்கிரவர்த்தியாம்நிதியும்
மிக்கானவாகுலங்கள் மேனுளில்நகுலன்
பந்தமுறுகின்றசிசு பாலனறுவர்களும்
நிந்தனையினாலே நிர்மூலமானார்கள்
கஞ்சன்துரியோதனனுங் காளமுனிவன்சகுனி
வஞ்சகஞ்செய்வாதாவி மாரீசனுங்கவந்தன்
பூதகியசோமுகியும் பொல்லாதசூர்ப்பனகி
வாதுபுரிதந்த வக்கிரனுமென்பவனும்
சகடனுடன்வில்வலனுஞ் சலேந்திரமகாசூரன்
விகடன்பிரலம்டன் மேனுளதாசூரன்
மஞ்சுகொடியோரா மிவர்கள்பதினெழுவர்
வஞ்சகத்தினாலிவர்கள் வம்மிசத்தோடேயழிந்தார்

சூரனுடன்தாரகனுந் துர்ப்பானுகோபனுடன்
வீரமிகுசிங்கமுகன் மின்னுளயோமுகியும்

தீயராமந்தத் திரிபுராளானவரும்
மாயமதுகைடவர்கள் மாபாவிதுந்துமியும்

மாலிசுமாலியுடன் மகிடாசுரன்சம்பரன்
காலகேயநிவாத கவசருடன்தாடகையும்

இடும்பன்பகாசூர னிரணியாட்சதனென்போன்
கடுங்கோபச்சதாராள் காலகதியாலழிந்தார்

தாசியங்கம்.

புருவநெறியாமல்விழி பூரளாமலேவெளியில்
தெரியாமலேயங்கச் சேட்டைகளுஞ்செய்யாமல்

அணுவளவுத்தலையை யசைக்காமலேமிடறு
தனில்பொருளாமல்சுருதி தந்திலயக்கியானம்

நீதியாய்த்தொனிவீணை நேராயதிற்றந்தி
நாதமுமிட்டு பூசைரண்டும்சரிபாகம்

அமுர்தரசதாளி யாய்மதுரசங்கீதம்
காமரசமாய்ப்பாடுமவள் தாசிமகள்தாசியென்பார்

காயமேல்விழியுமுயர் கண்மேல்மனமும்வைத்துக்
காயலபிநயமுங் காட்டுமவளேபாதம்

பாதாளச்சுருதியங்கம் பாங்காகவேசெய்து
வாதாளுஞ்செய்பவளே மத்தடியாமென்றிடலாம்

பலராககீதங்கள் பாங்கான தாளங்கள்
நலமாகப்பாடுமவன் நல்லதொருபாடகனும்

தாளத்திமேலநினைவு தரித்துநடனமிடும்
வாருற்றசம்பாதர மறுவானநட்டுவனும்

தாளலயமார்க்கந் தப்பாமலிங்கிதமாய்
வீறும்பகைச்சேவை விழைவோன்பரிசனனும்

வேசையர்தம்மில்லம்விட்டு மேல்விடமுஞ்சென்றுக்கால்
காசுபணமற்பமாய்க் கணிசங்குலைத்துவிடும்

வேசையர்கள் வரலாறு.

மிக்கவிலைமாதர் வீடுசெந்தக்கடையாம்
பக்கல்பொதுவம்பலமாம் படுக்கைவீடென்பதுகாண்
சந்தியிற்பாய்மெத்தையாந் தண்ணீர்ப்பந்தலதாம்
பந்தமுறுதேகம் படித்துறையதென்றிடலாம்

சூதாடுசோலைதுகில் துடைகள்தண்ணீர்ப்பந்தல்
பீதிலேகட்டிவைத்த மிக்ககதலிமரம்
மையாடுங்கண்ணியவள் வாரணிந்தகொங்கைரண்டும்
கையாடும்பந்து கடையெலுமிச்சம்பழமாம்

பாகமுறுசெவ்வாய் படிகமதிக்கொப்பாகும்
ஏகுமவள்மோகமது எட்டிக்கனியெனலாம்
பாசமுடனிவ்வாறு பாங்குடையார்தீங்குபுரி
வேசையர்மேலாசைகொள்ளல் வேலவர்க்குமேன்மையல்ல

பெண்களால் பங்கமடைந்தவர்.

சந்திரனுமிந்திரனுந் தன்னுடலிற்பங்கமுற்றார்
சந்ததஞ்சேர்வாலி சடாசூரன்கீசகனும்
எண்ணறியவாழ்வுடைய யிராவணனென்பவனும்
பெண்ணாலேபங்கமுற்றுப் பிராணலையமானார்கள்

சுந்தோபசுந்தரென்னுஞ் சூரிருவர்களும்
அந்தமிகுமோகினிமே லாசைகொண்டுமாண்டார்கள்
வையகத்திலொப்பில்லா மயிலுமெழில்சோ
தையலரைக்கண்டால் சவுரியமுமில்லாது

மானார்குணங்குறியிவ் வாறேதெரியாமல்
தானவர்மேல்மோகித்தால் தப்பாமல்துன்பம்வரும்

புருஷன்வாக்கிய பரிபாலனஞ்செய்தவர்.

ஆதியருந்ததியின் னுறுங்கவுசிகையுஞ்
சாதுகுணச்சாலை சந்திரவதியென்பவளும். ௧௨௰
உத்தமியிம்மிக்காக வோதுகளாகினியும்
பத்தாவின்வாக்கியபரி பாலனமேசெய்தவராம்

நான்குயுகத்திலும் யமனானோர்.

கிரேதாயுகத்திற் கெடுகாலிரேணுகையாம்
திரேதாயுகத்தினிலே சீதையெனும்பெண்ணாகும்

துன்னுதுவாபரத்திற் துரோபதையேகூற்றுவனும்
இந்நாள்கலியுகத்தி லில்லமெலாங்கூற்றுப்பெண்

பெண்களுக்கு சுவாதீனமில்லையெனல்.

பெற்றோர்கள்பேதையிலும் பின்பருவத்திற்புருஷன்
மற்றுவருமூப்பினிலே மைந்தர்களே காப்பவரும்

முக்காலும்பெண்ணுக்கு முயர்ச்சியொன்றுமில்லாதால்
மிக்கானபெண்செனமம் வீண்செனமமாகுமென்றார்

புருடனேதெய்வமென்று போற்றுகின்றகற்புடையா
ளரிதானவாண்செனமத் ததிகமென்றுசொல்லினரே

பத்தாவேதெய்வமென்று பணிந்தேற்றுங்கற்புடையா
ளுற்றமழைபெய்யென் றுரைத்தாலுமாரிபெய்யும்

பெண்கள் வரலாறு.

மெத்தவழகுடனே மேன்மையுள்ளமின்னாளோர்
புத்திரனைப்பெற்றவன்றே போமழகுமேன்மைகளும்

மேலானகன்னியர்கள் விரகத்திலேயழுந்திக்
கோலமெல்லாஞ்சீரழிந்து குரங்காகாப்பேருமில்லை

கதிராய்த்தன்னில்லைவிட்டுத் தனிவழிபோமின்னார்க்குப்
பதிவிரதாதாபமில்லை பங்கம்வந்துநேரிடுமாம். ௩௫௰

சாசகுணமில்லாத தையலரைச்சேர்வதிலும்
விரைவாகச்சந்நியாச வேஷமுற்றல்நன்றாகும்

அன்பில்லாப்பெண்ணின்மே லாசைகொண்டுசேர்வதிலும்
முன்பாகச்சற்குணப்பெண் முலைகண்டாற்போதாதோ

பேரினம்பெண்கள்பல பேரைபுணர்வதிலும்
காரிகையாம்வாலையொரு கன்னிதனைச்சேர்தல்நன்று

துற்கந்தம்வீசுமுடல் தோகையரைச்சேர்வதிலும்
சற்கந்தம்வீசுமுடல் நாரியரைக்காணல்நன்றாம்

பெண்ணொருத்திபேசினாற் பேருலகமும்நடுங்கும்
பெண்ணிருவர்பேசினார் பெருவானின்மீனுதிரும்

அலைவாரியுஞ்சுவறு மாயிழையாமூவருக்கும்
பலபேர்தான்கூடிலென்ன பாடுபடுமோபூமி

ஆசைகொண்டான்போலே யபிநயித்துமேல்விழுந்து
பேசுகின்றவஞ்சப் பிரியமறியாமல்

அன்பில்லாவேசைநமக் கன்புள்ளாளென்றெண்ணி
நம்பினவரெல்லாம் நாயினுங்கீழாவார்

கர்மகாண்டம்.

பூதலத்தோர்க்காகப் பொதியைமுனிநாயனுமுன்
காதலுற்றசொன்னகர்ம காண்டத்தியல்புசொல்வாம்

சமயமில்லாதார்க்குச் சளமாமகாநோயும்
கர்மவியாதிவந்த காரணத்தைச்சொல்லுகிறேன். ௲௬௰

செய்யவுருவழித்தல் சீவசெந்தைவதைத்தல்
வைதுதந்தைதாயை மனம்நோகவேபேசல்

நந்தவனமழித்தல் நாதாக்களைப்பழித்தல்
நந்தவனத்தில்மல ராதவரும்பூகொய்தல்

திட்டமுடனிப்பாவஞ் செய்தகொடியோர்க்குக்
குட்டநோய்வந்து கொடுமைசெய்யுமென்றனரே

நாகமுடனூர்வனங்கள் நல்லபறவைபட்சி
சாகவேகொன்ற சண்டாளரானவர்க்கு

குதிலாவலிக்கைவலி குமரகண்டன்முசலி
சதிராகவேவந்து சாருமெனவிசைத்தார்

உத்தமரைப்பழித்து உதாசினங்கள்பேசுவதும்
பத்தர்சித்தர்பாதம் பற்றித்துடர்ந்ததினால்

ஆதிசிவதலங்க ளானதனைப்பழித்துக்
கோபபடச்சினந்து கொடுங்கோபம்செய்வதினால்

கற்புடையமின்னார்மேற் காதலதுகொண்டதினால்
தப்பிதமாய்பித்தந் தலைக்கேறியேபிதற்றி

பண்பாய்பலகிரி பதினெட்டுமெய்துமென்று
முன்பாகதட்சணா மூர்த்திமொழிந்தனரே

பச்சைமரங்கள்தனைப் பட்டைவெட்டியேயுரித்தும்
மிச்சந்தளிர்கொழுந்து வேர்முதலாய்வெட்டுவதும்
குளிர்ந்தமரத்திலேகாய் கொம்புதனைமுறித்தல்
அருந்தமலருப்பூவை யனவரதங்கிள்ளினதால்
மண்டைக்கரப்பன் வாயுவொருதலைநோய்
மண்டையிலேகுத்து மகத்தானபீனசங்கள்
மாருகக்கபாலத்தின் வாய்வானநோய்தானும்
வீருய்வந்தெய்துமென்று விளம்பினார்மாமுனிவன்
வித்தானதையழித்து மேலுமிதைத்தின்றதினால்
பக்தியுடன்கன்றுக்குப் பால்விடாத்தோஷமதால்
பாலகரைபழித்துப் பால்விடாத்தோஷமதால்
சாலயிளம்பயிர்கள் தன்னையழிந்ததினால்
மானார்க்குக்கெர்ப்பநோய் வருமவர்க்குமைந்தரில்லை
ஆறுலிப்பாவிகள்தா னந்தரங்கஞ்சொல்லவொண்ணு
சூரியனைத்தோத்தரியாத் தோஷமதானாலும்
ஈரிலுயிரைப்பிடித்து நெருப்பிலிட்டுசுட்டதினால்
மடிப்பாய்ப்பிராணிகளை மாயவேசெய்வதினால்
அடிக்கவுயிரோடதனைச் சுடுமணலிற்போடுவதால்
நல்லநிழல்மரத்தை நான்குரித்துக்கொண்டதினால்
வல்லமையாய்ப்பச்சை மரங்கள்தனையெட்டினதால்
பசித்தோரிருக்கவதைப் பாருமதுண்டதினால்
நிசமாய்ச்சுரதோஷம் நேருமென்றேயுரைத்தார் ௲௬௰
மாதாபிதாவை மனம்நோகச்செய்ததினால்
வேதாந்தசற்குருவை மெய்நோகவைத்ததினால்
வீம்பானபேச்சுகளும் விசுவாசபாதகமும்
நாம்பெரியோரென்று பலரையும்பழித்தல்
தெய்வநிலையழித்தோர் தினந்தினமும்பொய்யுரைத்தோர்
வையகத்திற்பாண்டுநோய் வந்தேமெலிந்திடுவார்
ஊனைத்தின்ன உயிர்வதைகள்செய்வதினால்
மானகன்கற்பழித்து பூமரங்கள்தனைவெட்டினதால்
புண்ணியந்தான்செய்யாமல் புண்ணியர்களைக்கொடுத்துத்
தண்ணீர்குளமேறி தன்னைபுதைத்துவிட்டும்

நிறுப்பதளப்பதுவும் நிரைகள்குறையவிற்றும்
மாறுபடநீரில் மலமூத்திரங்கள்விட்டும்

தூராகதமாயிவ்வாறு துன்பங்கள்பட்டும்
பிராணிக்கழிச்சல்வந்து கெடுவாரெனவுரைத்தார்

பொல்லாக்கடுங்கோபர் பொய்யேமிகுத்துரைக்குஞ்
சொல்லுவதைபின்மறுத்துத் தூஷணித்துப்பேசுபவர்

உண்டுமிகப்பேச்சுக்களால் ஊராரைவைதவர்க்கும்
திண்டுமிண்டாச்சீவசெந்தை திறைக்கவேகொன்றவற்கும்

கன்னத்திற்புத்து கண்டேசிவிப்புருதி
கன்னத்திற்சூலை கடிதானபல்லரணை

தந்தரோகங்கள் சசிக்கரியாவாய்புத்து
தந்தரோகஞ்சூலை தப்பாமல்வந்திடுமாம்

சற்குருவைதூஷணித்தோர் தன்மையில்லாக்கோபத்தால்
முக்கியன்சேர்ப்பாதையிலே முள்ளதனைப்போட்டவர்க்கும்

பச்சைமரமதனைப் பங்கமுறவெட்டினர்க்கும்
உச்சிதமாய்ப்பூவிலைகா யுதிரவடித்தவர்க்கும்

வண்டுகடிகறப்பன் மகத்தானகுட்டநோய்
என்றுமிவர்கட்குவந் தெய்துமென்றார்மாமுனியும்

பத்தர்சிவபத்தர் பரமசிவமோதிகளைச்
சித்தங்கலங்கவே செய்தகொடும்பாவிகட்கும்

வில்லாலுமம்பாலும் வெடிமருந்துகுண்டாலும்
கல்லாலும்பொல்லாக் கபடத்தார்சீவசெந்தைக்

கொன்றகொடும்பாவிகட்கு கொடிதானமார்பாணி
கண்டமாலைபிளவை கழல்வாதம்வந்திடுமாம்

காங்கிசையாப்பெண்கள்தமைக் கவனித்துப்பார்த்தவர்க்கும்
ஏங்கிமவர்போகத்தி லின்பமுற்றபாவிகட்கும்

பின்னரைக்கண்டு விலகாமற்போனவர்க்கும்
பின்பவரைத்தூஷணமாய்ப் பேசிபழித்தவர்க்கும்

தப்பிதமாகப்பொய்ச் சத்தியங்கள்செய்தவர்க்கும்
மெய்ப்பானதெய்வத்தை மேவிநிந்தைசெய்தவர்க்கும். ௧௮௰

பலதாமுயிர்வதைகள் பண்ணுவதைகண்டிருந்தும்
விலக்காமற்பார்த்திருந்த வேட்டைநாயானவர்க்கும்

கண்ணில்வியாதிவருங் கண்ணொளிவுதான்மறையும்
தொண்ணூற்றுயாறுநோய் துடருமென்றார்மாமுனியும்

பேறணைதேதுமுயிர்ப் பிராணிதனைத்தான்பிடித்து
கூறுததூக்கிவைத்துக் கொன்றகொடும்பாவிகட்கும்

கோவதனைக்கொன்றவர்க்கும் கொடிதானகண்ணிவைத்து
சீவசெந்தைநீர்துறையிற் சேதமேசெய்தவர்க்கும்

அலரும்பிராணிகளை யமுக்கியதனுடைய
தலையறுத்துமிக்ககுடல் தன்னையெடுத்தவர்க்கும்

ஈனமிரக்கமற்ற யிராட்சதரையொத்தவர்க்கும்
ஆனந்தவாழ்வுவந் தமுக்குமெனவுரைத்தார்

இறந்தவேழுற்பிறப்பிற் சேயிழைமார்தங்களுக்கு
மருந்தீடுசெய்து மயக்கிக்கர்ப்பழித்தவர்போல்

மயலானபெண்போலே மறுஜென்மத்தினிலெவரும்
சயரோகமாகவந்து சார்குவாளெனவுரைத்தார்

மார்க்கமதில்நிற்கு மரங்கள்தனைவெட்டினவர்
பூக்கமழுநல்மறத்தின் புறத்தொனியைத்தானுரித்தோர்

வீணிலேபூடுகளை விருட்சங்களைமுறித்தோர்
உலனுறுகின்றகால்முறித்தே யோடாயற்செய்தவர்கள். ௲௯௰

தம்பமாய்ச்சீவசெந்தின் சங்கங்களையுடைத்தும்
கொம்புகளைமுறித்துக் கொடும்பாவம்செய்தவற்கு

வாசங்கள்வந்து வழங்காமற்கால்கைகள்
கூசனுடனிருங் குளுருரும்வருமென்றனரே

பலபேர்வயிறெரியப் பண்ணிவைத்தபாவிகட்கும்
நலஞ்சேர்பெரியோரை நடுநடுங்கிப்பேசினர்க்கும்

மாறுமனக்கவடு வைத்துவெகுபேரைச்
சீரழிவுசெய்தவர்க்குஞ் சிலர்பசிக்கவுண்டவர்க்கும்

சண்டாளத்துவங்கள் சதாகாலஞ்செய்தவர்க்கும்
பிண்டானகுன்மவியாதிவந்துசூழுமென்றார்

பட்சிமிருகங்கள் பாம்புமுதலானதனை
மெச்சிப்பிடித்தடைத்தால் விலங்கவர்க்கேயெய்துமென்றார்

சாலப்பலவுயிரைத் தண்ணீரினண்டுகளை
காலைமுறித்தவர்க்குக் கால்கைமுடங்குமென்றார்

ஒப்பனையானவை.

வெடுக்கென்றசொல்லா மேலோரகத்தில்வைத்தால்
மடத்தையுங்கட்டியதில் வங்குராங்கைவைத்ததொப்பாம்

எண்ணுமல்வஞ்சகப்பெண் ணின்சொல்லைநிச்சயித்தால்
மண்குதிரைதனைநம்பி யாற்றினிற்சென்றதொக்கும்

அகாமியமுள்ளாரெனினு மறிவாளறைசேர்ந்தால்
மகாமேருவைச்சேர்ந்த வானதனைநிகர்ப்பார். தாக

தன்னவரேயானாலுஞ் சார்பறிந்துசேர்தல்நன்று
துன்னுசுடர்விளக்கெனினுந் தூண்டுகோல்வேணுமதாம்

கடவுள்விதிவெல்லாக் கடவரெவராருமில்லை
மடலிலேயிட்டாக்கால் குடலிலேதங்காதே

நிலையாமநிமலனடி நேர்ந்தார்குறையுளதோ
மலைமேலிருப்பவரை வந்துபன்றிபாய்ந்திடுமோ

பெரியோர்திருவுளந்தான் பேதித்தலார்தீர்ப்பார்
கரிமலைசாய்ந்தாலமண் கட்டியதுதாங்கிடுமோ

கடந்தெவருஞ்சொல்லாத காலம்வெல்லப்போகாது
உடைந்தசங்கில்சற்றுமொரு வோசைபரியாது

மட்டிகட்குநல்லபுத்தி வர்ணித்துசொன்னாலும்
இட்டமுற்றதன்குணற்போ யெய்யாதுநற்குணந்தான்

கடையரால்மேலோர்க்குக் கருமங்களும்விழலாம்
முடப்பதுதண்ணீரில் முக்கலத்தையழிக்கும்

வலியோரைச்சார்ந்தவர்கள் மற்றெவர்க்குமஞ்சவரே
மலையேதான்லெக்கானல் குருடனெய்யமாட்டானே

தலையானோரைச்சேர்ந்தால் தாழ்வில்லைதாழ்வுவந்தால்
புலிக்கடுமைபட்டுக் கறிக்காசைபட்டதொக்கும்

மெலிவாகிலுமேலோர் மேற்செயலேசெய்வார்
புலிபசித்தாலெப்போதும் புல்லருந்தமாட்டாது

விற்பனமேலோர்கள் மெலிவாகிப்போகிலென்ன
குப்பையிலேபோட்டாலுங் குன்றிமணிமங்காதே

நேசருடன்பிறந்தோ ரிரண்டுபேர்வேறுபட்டால்
ஊசியிலேகப்பாகி நூல்நுழையாவாராகும்

ஏற்காதவைசெய்தா லிகழ்ச்சியென்றுபோகாது
ஊர்வாயைமூட வுலைமூடிதானுமுண்டோ

எட்டாகனியதனுக் கோராசைபட்டுமென்ன
தொட்டுக்காட்டாதவித்தை சொட்டுபோட்டால்வருமோ

நாட்டுசுரைக்காய்கறிக்கு நாட்டினாலெய்துமது
ஏட்டுச்சுரைக்காய்கறிக் கெய்தாதொருநாளும்

மாறுபாட்டுக்காரன் வாக்குநிசமென்றறிந்தால்
ஏறிவிட்டஏணிதனை யெடுத்துவிட்டவாறாகும்

வாழ்வுடையோர்முன்னே வறுமையுற்றோர்சொல்லிலையா
ஏழைசொல்லம்பலமு மேறாதுகண்டீரே

கொடையாளியேவறுமைக் குள்ளாகினுமீவன்
கடுகுசிறுத்தாலுங் காரமதுபோகாதே

விற்பனக்குருமூடன் மேலாம்பரமானால்
குப்பையுயர்ந்து கோபுரமுந்தாழ்ந்ததொக்கும்

இட்டமுறவாழ்ந்தோர்க் கியல்புதப்புங்காலம்
கெட்டவர்க்குற்றார் கிளைதனிலுமில்லையில்லை

இணக்கமுடன்நல்லபுத்தி யெவ்வளவுங்கேளார்க்குறைத்தல்
பணத்துக்கோரம்புகொண்டு பாழிலெய்தவாறாகும்

காலிபயிர்தின்னுமற் காப்பதுவேவேலியுமாம்
வேலிபயிர்தின்றால் விளைவதொருபோதுமில்லை

விலையாணைகாரியமு மில்லாதுமந்திரத்தால்
கலைப்பார்கலைத்தாக்கால் முலைப்பால்மருந்தல்லவோ

கூடாவொழுக்கமகளிர்.

பார்ப்பளவில்திரும்பிப் பாராளுரைத்தமொழி
கேளாள்மருவிகள மேவுமேசொல்லாளாம்

கள்ளன்போல்மற்கட்டிக் கவிழ்ந்தாலுமல்புரிவாள்
உள்ளன்புக்கா ருடன்போயுஞ்சண்டைசெய்வாள்

ஆசையுடனுபர மடைக்காய்முகல்கொடுத்தால்
நாடாள்புரங்கையி னலதனைத்தட்டுவளாம்

அங்கையாற்றொட்டா லாலவரம்போற்சீறி
சங்கைகெடப்பேசிச் சத்துருவைப்போல்பார்ப்பாள்

அயலாருடனேவிளை யாடியேகூடுவளாம்
மயலாய்க்கணவன்பிடித்து மருவச்சரசஞ்செய்தால்

மெய்யதிலேநோய்கள் மிகவெனவுந்தர்க்கமிட்டு
பொய்யாணையிட்டுப் புறங்காட்டியேபடுப்பாள்

முந்திபுறங்கிப்பெரு மூச்சுவிட்டெத்தனையோ
சந்தோஷஞ்சொன்னாலுஞ் சற்றேனுமேயிறங்காள்

ஆரிடத்திற்போடாவிவன் றவன்கொடுப்பதையெறிந்து
சீறிச்சினந்து தெய்வமேயென்றழுவாள்

நாடானதிற்பெண்கள் நான்குவகைச்சாதியிலும்
கூடாவொழுக்கங் குறையிதுவாமென்றனரே

அபியுற்றமகளிர்.

ஆடவர்களென்னுரு மாசைகொண்டபெண்குறிப்பும்
கூடுமொழுக்கக் குறிப்பதனைச்சொல்லுகிறோம்

பலநாளுமாடவனைப் பார்த்தகண்ணாயிருப்பாள்
தலைவனவனைப்பார்க்கில் தலைகவிழ்ந்துமேசிரிப்பாள்

உள்ளன்புகாட்டா ளோங்கிபெருமூச்சுவிட்டு
தள்ளாக்குழந்தை தனைத்தழுவிமுத்தமிட்டு

பாங்கியரைத்தழுவாள் பாங்கனைப்பார்த்துநகைத்துப்
பாங்காய்தலையசைத்துப் பல்லைக்கடித்துறுக்கி

பிறரெவரையும்நிறுத்திப் பேசுவதுபோல்பேசிப்
பிறகால்போய்மூக்கைப் பிசைந்துதும்மல்தும்மி

தலைவனன்புவைத்தாலுந் தன்னுடன்பொய்யென்று
தலைவன்மொழிகேட்டுமவன் றன்றொழிலையுமகிழ்ந்து

ஆடவன்வீட்டுக் கடிக்கடிதான்போவதல்லால்
ஆடவனைக்கண்டா லறக்கணிசிநாணுதலும்

கொம்பனையார்க்குள்ளன்பு குறிப்பறிதலாகுமென்று
முன்பாகநூலுகளில் முன்னோருரைத்தனரே

பெண்களுடையதத்துவம் பத்துக்கும்விபரம்.

மிக்கயின்னூலின் மேன்மைகுறிப்பறிய
தக்கதொருபெண்கள்பத்து தத்துவத்தைசொல்லுகிறோம்

பொன்னிறமுமல்லிகையின் பூமணமுந்தாமரையும்
வன்னமலர்முகமு மாசற்றமுர்தமொழி

தனதானியவாழ்வுஞ் சார்ந்தசனசேகரமும்
இனமோடுவாழ்பவ ளிவள்தெய்வதத்துவமாம்

இரக்கம்வணக்க மின்பமுறுதேகம்
சிறக்கவேதானதர்மந் தெய்வவிசுவாசம்

வன்கொலைகண்டஞ்சுமவள் மானிடருக்குள்தத்துவமாம்
முன்சொல்லும்நூலதனில் முறையினுரைத்தனரே

நித்திரைமிகுத்தல் நெடுமூச்சுசோம்பல்களும்
மெத்தவேகொட்டாவி வீடெல்லாம்போய்த்திரிதல்

சுத்தமில்லாதேகஞ் சுசியில்லாபோசனமும்
ஏத்துகின்றமின்னாள் நரகதத்துவமாகும்

ஆற்றில்குளத்தி லலைகடலிலேமணியி
லேற்றமிகுபெண்களுட னென்றும்விளையாடமனம்

நாணமில்லாமை யென்னாளுங்கொடுங்கோபம்
வாணுதலாலேயியக்க மாதென்றுசொல்லுவதாம்

பரிமளசுகந்தாதி பகரிரத்தினவாபரணம்
சரசசங்கீதவித்தை தன்னில்வெகுவிருப்பம்

சார்ந்தினமுந் தர்மசிந்தைகற்புடையாள்
காந்தர்வதத்துவத்தின் கன்னியென்றுசொல்லிடலாம்

வெட்கமில்லாமை மிகுந்தபலபோசனமுந்
துற்கந்தவாசந் துடியானவார்த்தைகளும்

ஊட்டினசரீர முடையமூக்குமாமிசமு
மூட்டமதுவுண்ணல் முறையில்லாதுர்நடத்தை

நித்திரையில்லாமையிவை நேர்ந்தபெண்ணுமேபேயின்
தத்துவமாமென்று சாற்றினார்முன்னோர்கள்

அக்கினிகண் ணு மழுகுசற்றமில்லாமை
வக்கணையாயாடவரை வலியப்பிடித்திழுத்தல்

மாறுபாடானமன மல்லுகட்டிப்புணரும்
நாரியவள்தானே ராட்சதரின்தத்துவமாம்

ஆரிடத்திலாகுனு மன்புசற்றுமில்லாமை
மாறிமாறிப்பார்த்தால் மயிர்தூவுதூறுதலை

வேறுமுகம்பசியு மிகுந்தபயமுடையாள்
காகத்தின்தத்துவத்தின் கன்னியவளாகுமென்றாள்

கூடுகின்றவாடவரை கூர்நகத்தாற்பல்லதனால்
நாடிக்கடிப்பதுவு நாணஞ்சற்றில்லாமை

நிறமதுவும்பங்கமதாய் நேத்திரத்தால்மருட்டநல்ல
குறங்கினுடதத்துவத்தின் கொம்பனையாளாகுமென்றான்

திண்டுமிண்டானசொல் தேகசுத்தமில்லாமை
வண்டிவெடுத்தகுரல் மல்லுகட்டிபுணர்தல்

மழுமாரிகண்டவரை வலியப்பிடித்திழுப்பாள்
கழுதையின்தத்துவத்தின் கன்னியவளாகுமென்பார்

வையகத்திலேமேலா மணவாளன்சொன்னபடி
மொய்க்குழலார்சாதி மூன்றின்குறியுரைப்போம்

மானைநிகர்த்தவிழி வனசமலர்முகமுந்
தேனைநிகர்த்தமொழி தேமற்படர்ந்தஉடல்

சுருண்டுநெரிந்தல்குழல் தும்பிப்படைநடையுந்
திரண்டகோவைகனிவாய் செண்பகப்பூந்தேகமுமாம்

மின்னிடையுந்தென்ன மிளம்பாளைவாசமுமாய்
அன்னநடையு மழகில்ரதியெனவும்

வட்டமாய்த்தங்கநிற மானவிளமார்பும்
இட்டமுறுகலவிக் கிசைந்திட்டசற்குணமும்

தர்க்கமிடுமின்கோபி சாப்பாடுமற்பமதாம்
இக்குறியின்மாதவளு மின்பமுளமானசாதி

பெட்டைக்குதிரைச்சாதி.

உயர்ந்துகுளிர்ந்தவுச்சி யுட்குழிந்தகன்றகண்கள்
உயர்ந்துபெருத்தகொங்கை யுதடுபருத்திருக்கும்

சாலப்பருத்தமயிர் தந்தமோநீண்டிருக்கும்
தாலவிடைபருத்துத் தாருபோலேவுயிரும்

அடக்கமொன்றுமில்லாமை யல்குல்பணைத்திருக்கும்
மடக்கொடியாள்பேசுகின்ற வாய்கூமகுளறுதலாம்

போசனத்திலேபிரியம் புணர்ந்தவர்மேலும்பிரியம்
வீசும்புலால்நாற்ற மிரவுபகல்நித்திரையும்

நிராவெறுப்புஞ் சிவந்தபருவுதடும்
கூறுனமாதுபெட்டைக் குதிரையென்றுசொல்லினரே

பிடியானைச்சாதி.

சாலப்பருத்தநெற்றி தாடைசெவிநாசி
காலுடனேகைத்தாளுங் கழுத்துமிகப்பருத்து

சுருண்டுசிவந்தமயிர் தொங்குமதரமுமா
முரண்டுகிதஞ்சண்டை மொழியுமிடிபோலாய்

அல்லும்பகலும்கலவி யானதிலேசிந்தையுமாய்
பல்லுமிடையுளதாய்ப் பாவத்துக்கஞ்சாமை

யார்க்குமனுகூலி யானைமதநாரி
பாக்குப்பனிரண்டு அங்குலமாமல்குலது

மிடியளவுஞ்சண்டைவிடாள் வெட்கத்துக்கஞ்சாளாம்
பிடியானைசாதியென்று பேசினார்முன்னோர்கள்

இன்னம்சிலநீதி யெடுத்துமேகூறவென்றால்
வண்ணமாயிந்நூல் வளருமெனமுடித்தேன்

வாழி.

ஐங்கரனும்வாழி ஆறுமுகன்வாழி
மங்கைபாகன்வாழி மாயன்பிரமன்வாழி
தூயமுனிவோர்வாழி சுத்தசைவர்வாழி
சேயசெங்கோல்செலுத்தும் நிருபர்மிகவாழி
கற்புடையமாதர் கவிவாணர்தாம்வாழி
விற்பனமாயிதைப்படிக்கும் வித்தகரும்வாழியவே

மதுநீதிகாதல்
முற்றிற்று.

கடவுள் துணை.

அட்டவணை.

அட்டவணை

முற்றிற்று.

அறிக்கை.

இவ்வுலகின் மாட்சிமைதங்கிய நேசர்களே முன்னோர்களாலுண்டான நீதிநூல்களிற்சொல்லிய சாரங்களைத் தெரிந்தெடுத்துச்சகலருக்கு முபயோகமாகும்பொருட்டுச் செய்யுளாக வியற்றி மனுநீதிகாதலென்று பெயர்கொடுத் திருப்பதால் இந்நூலை இன்னாட்டிலும் தென்னாட்டிலுமுள்ள தமிழ்பாடகசாலை உபாத்தியாயர்கள் சிறுவர்களுக்குக் கற்பிப்பார்களாகில் நீதிகளை எளிதிலறிவார்கள் வேறு நூல்பார்க்க வேண்டுவதில்லை இதன்றி கற்றவர்களும் கனவான்களும் தனவான்களும் இதைப்பார்வையிட்டால் வெகுவிஷயங்களை எளிதிலறியலாம்.

ரிங்வோரங்கியூர் என்னும்

படை சங்காரன்.

ஐயா, உம்முடைய தேகத்தில் எத்தபாகத்திலாவது மேகப்படைகள் அல்லது பெண்களுடைய தேகத்தில் எவ்வித படைகள் இருந்தாலும் எமது (படை சங்காரன்) என்னும் ஒளஷதத்தில் போதுமானது எடுத்து படையுள்ளயிடத்தில் தடவி நன்றாய்த்தேய்த்து மூன்றுமணிநேரம் பொருத்து சோப்பு அல்லது சீக்காய்போட்டுதேய்த்து அலம்பிவிடவும். இதுபோல இரண்டு மூன்றுவேளை மேற்சொன்னபடி செய்தால் நல்லகுணத்தைக் காணலாம். இந்த மருந்தினுல் அனேக ஜெனங்கள் சுகமடைந்திருக்கிறூர்கள்.

ஒரு புட்டியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானுல் அரையணு தபால் ஸ்டாம்ப் அனுப்பினுல் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

மதராஸ்.